www.padippakam.com

இலங்கையில் செய்தித் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the G.P.O



# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණොට්ටම්

வெளியீடு: 17 | 10 ஆனி 1995 | விலை: ரூபா ஐந்து

★ **இனக் கலவரத்தை உருவாக்கும் முயற்சியில் குறுகிய அரசியல் லாபம் தேடுவோர் முனைகின்றனர்.**

★ **இதற்கெதிரான விழிப்புக் குழுக்களை அமைக்குமாறு சந்திரிகா அழைப்பு.**

★ **புலிகள் அப்பாவி மக்களை கோரத்தனமாக கொல்வதை நிறுத்துமாறு தமிழ் மக்கள் வற்புறுத்த வேண்டும்.**

## இன்றைய சர்வதேச உலகம் காட்டுமிராண்டிக் காலத்திலிருந்து வெகுவாக முன்னேறி வந்துவிட்டது.

# நாம் பின்னோக்கிச் செல்கிறோமா?

கடந்த சில வாரங்களில் புலிகள் அப்பாவிச் சிங்கள மக்களையும், பொதுமக்களின் செல்வாக்குப் பெற்ற புத்த பிக்குவையும், படுகொலை செய்தமையும், இதற்குப் பழிவாங்கும் வகையில் காலியில் 30கடைகள் சில சிங்கள் இனவெறித் தலைவர்களின் பின்பலத்துடன் தீர்கிரையாக்கப்பட்டதோடு 300க்கும் அதிகமானோர் அகதிகளாக்கப்பட்டதும் தெரிந்ததே. திம்புலாகல தேரோவின் கொலைக்குப் பழிவாங்கலாக 3தமிழர்கள் அங்கு கொல்லப்பட்டனர். புலிகள்–தங்கள் கொலை வெறியை நியாயப்படுத்தும் குறுகிய நோக்கத்தைவெல்லவும், சிங்கள இனவெறிச் சக்திகள்–மீண்டும் தாம் ஆட்சிக்கு வரும் வகையில் அரசுக்கு நெருக்குவாரத்தை ஏற்படுத்தும் குறுகிய அரசியல் லாபத்திற்காகவும், மீண்டும் ஓர் இனக்கலவரத்தை ஏற்படுத்த முனைந்து வருவதை அவதானிக்க முடிகிறது. இச்சூழ்நிலை காரணமாக இன்னோர் இனக்கலவரம் வெடிக்குமா? என்ற பயம் பரவலாக தமிழ்,சிங்கள மக்கள் மத்தியில் இன்று நிலவிவருவதையும் காணக் கூடியதாக உள்ளது.

புலிகளைப் பொறுத்தவரையில், இனக் கலவரம் ஒன்றை உருவாக்குவதன் மூலம் சிறிலங்கா அரசும், சிங்கள மக்களும் இன வெறியர்கள், இவர்களுடன் தமிழ் மக்கள் இணைந்து வாழ முடியாது என்ற ஓர் கருத்தை சர்வதேச ரீதியாக உருவாக்க விரும்புகின்றார்கள்.

இரண்டாவதாக, இனக்கலவரம் ஒன்றை உருவாக்குவதன் மூலம் தென்பகுதியில் இருக்கக்கூடிய முழுத் தமிழ் மக்களும் வட–கிழக்கிற்கு தப்பிச் செல்லவேண்டி ஏற்படலாம். இலட்சக்கணக்கான இம்மக்களின் இடம் பெயர்வு, புலிகளுக்கு பல்வேறுபட்ட சாதகமான சூழல்களை உருவாக்கும்.

முதலாவதாக பெருமளவு இளைஞர்கள், யுவதிகள் புலிகளில் இணையும் நிலை உருவாகும். இதன் மூலம் இன்னும் விரிவான இராணுவத்தை உருவாக்க முடியும். அப்படியான ஓர் சந்தர்ப்பம் ஏற்படும் பட்சத்தில், சர்வதேச அனுதாபமும் புலிகளின் பக்கம் திரும்பும் என புலிகள் எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது.

இப்படியான இனக்கலவரம் ஒன்றை உருவாக்கும் நோக்கமாகவே புலிகள் சிங்கள மக்களை கொலை செய்து வருகின்றனர்.அதுமாத்திரமின்றி,சிங்கள மக்களுக்குள் செல்வாக்கு மிகுந்த திம்புலாகலத் தேரர் போன்ற பௌத்த துறவிகளையும் கொலை செய்து வருகின்றனர். இப்படியான கொலைகள் தென்பகுதியில் மிகப்பாரிய பின் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனைத் துல்லியமாகக் கணிப்பிட்டே புலிகள் இயங்கி வருகின்றனர்.

மறுபக்கம் ஐ.தே.கட்சி அரசால் போஷித்து வளர்க்கப்பட்ட சிங்கள இனவெறியர்கள், புலிகள் ஏற்படுத்திக் கொடுக்கும் சந்தர்ப்பத்தைப் பாவித்து கலவரங்களை உருவாக்க முயற்சி செய்கின்றார்கள். அப்படியான கலவரத்தின் மூலம் சந்திரிகா அரசுமீது மக்களுக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்துவதோடு, இது ஓர் கையாலாகாத அரசு, நிர்வாகத்தை நடாத்த முடியாத அரசு என்ற கருத்துக்களை உருவாக்கி, அரசுக்கு நெருக்கடி கொடுப்பதே இவர்களின் நோக்கமாக இருக்கின்றது.

அண்மையில் காலியில் 30க்கு மேற்பட்ட தமிழ்க் கடைகள் எரிக்கப்பட்டு, சில தமிழர்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டனர். அரசாங்கத்தின் உடனடி நடவடிக்கையால் இது ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இல்லையேல் இதுவே இன்று பாரிய இன அழிவுகளை ஏற்படுத்தி இருக்கும்.

இந்திய அமைதிப்படையை திருப்பி அனுப்ப வேண்டுமென்பதில் எவ்வாறு புலிகளும் பிரேமதாசா அரசும் இணைந்து செயற்பட்டதோ, அதே போல், இனக்கலவரம் ஒன்றை உருவாக்கவேண்டுமென்பதில்புலிகளுக்கும், இங்குள்ள சிங்கள இனவெறியர்களுக்கும் அக்கறை உண்டு.

இவற்றை மக்கள் புரிந்து கொள்வது மாத்திரமல்லாமல், இப்படியான நிகழ்வுகள் ஏற்படாதவாறு மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்பதும் இங்கு முக்கியமாகும். கிராமங்கள் தோறும் இவற்றுக்கெதிரான விழிப்புக்குழுக்களை அமைக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க அழைப்பு விடுத்ததானது, பிரச்சினையின் ஆழத்தை உணர்த்துகின்றது. எனவே தமிழ் மக்களும், புலிகளின் இவ்வாறான கோரத்தனமான அப்பாவி மக்களின் கொலைகளை நிறுத்துமாறு வற்புறுத்த வேண்டும்.

### "அமைதிக்கான அபிலாசைகளை நிராகரிக்கும் புலிகளது பிரச்சாரகர்களின் நியாயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது"

வெளிநாட்டிலிருக்கக்கூடிய இலங்கை அறிஞர்கள் ஒரு குழுவாக இணைந்து
வெளியிட்டுள்ள அறிக்கையில் தற்காலிக போர் நிறுத்தத்தை புலிகள்
மீறியுள்ளதை மிக வன்மையாகக் கண்டித்துள்ளதோடு அரசாங்கம்
குறிப்பிட்டுள்ள அரசியல் தீர்வுத் திட்டத்தை உடனடியாக நாட்டு
மக்களுக்கு முன்வைக்க வேண்டும் எனவும் கூறியுள்ளனர். அவர்களது
அறிக்கை பின்வருமாறு அமைகின்றது.
பாதுகாப்பு நோக்கற்ற இராணுவக் கணிப்பீட்டின் அடிப்படையில் போர்
தவிர்ப்பு ஒப்பந்தத்தை முறித்துக் கொள்வதற்கான புலிகளின் தீர்மானத்தை
நாம் சந்தேகத்திற்கிடமின்றி மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.
ஜனநாயகத்திற்கு மிகவும் விரோதமான முறையில் மக்களின் அமைதிக்கான
அபிலாசைகளை நிராகரிப்பதற்கு, புலிகள் சார்பாக அவர்களது சர்வதேச
பிரச்சாரகர்கள் கூறுகின்ற ஏற்றுக் கொள்ளப்பட முடியாத நியாயத்தையும்
நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.
இதேபோன்று தென்பகுதியில் தமிழ் மக்களுக்கெதிரான பதிலடி கொடுப்பது
என்ற சில குழுக்களின் தவறான அரசியல் கொள்கைகளையும் நாம்
வன்மையாக வெறுக்கிறோம். தமிழ் மக்களின் நீதியான போராட்டத்திற்கும்
புலிகளின் நடவடிக்கைகளுக்குமிடையில் நியாயமானதும், அரசியல்
ரீதியானதுமான தெளிவான வேறுபாட்டை நாம் கண்டுகொள்ள வேண்டும்.
அத்துடன் மக்கள் முன்னணி அரசாங்கம் வடக்கிலுள்ள மக்களுக்கு
உணவுப் பொருட்கள், மருந்து வகைகள் என்பன கிடைப்பதற்கு ஆவன
செய்ய வேண்டும் எனவும் நாம் கூறுகின்றோம். புலிகளுக்கும் அரசுக்கும்
நடக்கும் ஆயுதப் போராட்டமானது தமிழ் மக்களின் மனிதாபிமான
தேவைகளுக்கு இடைஞ்சலாக இருக்கக்கூடாது. புலிகள் மீண்டும் யுத்தத்தை
ஆரம்பித்தபொழுதும் கூட தமிழ் மக்கள் அமைதிக்கான தமது அவாவை
கடந்த சில மாதங்களாக மிகத் தெளிவாக வெளிக்காட்டியுள்ளனர்.
குறுகிய இராணுவ வெற்றிகளுக்காக இனப்பிரச்சினைக்கான தீர்விற்கு
புலிகள் இன்னும் ஒருமுறை இராணுவ வழிமுறைகளை ஏற்படுத்திக்
குழப்பிக் கொள்ளக் கூடாது. அவர்களுடைய இராணுவ
மூலோபாயத்திலிருந்து விடுபட்டு, அதற்கு மாற்றீடாக இனங்களுக்கிடையில்
நீதியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டுவதற்கு தமிழ் மக்கள் விடுக்கும்
அழைப்பை எல்.ரி.ரி.ஈ ஏற்றுக்கொண்டு அதற்கான அரசியல் திட்டங்களை
வகுக்க வேண்டும் என நாம் அவர்களை கோருகின்றோம். தொடர்ந்த
வன்முறைப் போராட்டத்தில் பாதிக்கப்படுவது அப்பாவி மக்கள் என்பது
எமது கடந்தகால கசப்பான வரலாறாகும்.
மேற்கண்டதின் அடிப்படையில் மக்கள் முன்னணி அரசாங்கமானது தனது
தேர்தல் கால பிரச்சாரத்தில் குறிப்பிட்டது போன்று இனப்பிரச்சினைக்கு
நீதியானதும் ஜனநாயக பூர்வமானதுமான தீர்வொன்றை உடனடியாக
மக்களுக்கு அறிவிக்க வேண்டும். இது சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள்
மத்தியில் ஆரோக்கியமான கருத்துப் பறிமாறல்களை உருவாக்கும்
என்பதுடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கூட்டான முடிவுகளை
எடுப்பதற்கும் ஜனநாயகத்துடன் கூடிய அமைதியை உருவாக்குவதற்கும்
இது உதவியாய் இருக்கும். அத்துடன் தமிழ் மக்களின் விருப்பங்களை
புலிகள் கௌரவப்படுத்த வேண்டும் என்பதுடன், ஓர் அரசியல் தீர்விற்கான
தேசிய கலந்துரையாடல்களில் அவர்கள் கலந்து கொள்ள வேண்டும்.

தியாகிகள் தினச் சிறப்பிதழ் உள்ளே...

படிப்பகம்

www.padippakam.com



# கண்ணோட்டம்

## பொதுமக்கள் கொலையை நிறுத்துதல்

அரசாங்கமும் சரி, புலிகளும் சரி, தமது குறுகிய நோக்கங்களுக்காக அல்லது, ஒருவர் மேல் மற்றவர் தாக்கத்தைக் கொண்டு வரவேண்டுமாயின் பொதுமக்களைக் கொலை செய்வது என்ற ஓர் கலாச்சாரத்தைக் கொண்டுள்ளனர்.

கடந்த காலங்களில் கொக்கட்டிச்சோலை, தங்கவேலாயுதபுரம், மயிலந்தனை, நெடுந்தீவு குமுதினிப் படகென, சிறீலங்கா இராணுவத்தால் பல படுகொலைகள் ஏற்படுத்தப்பட்டன. இதில் நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டார்கள்.

இதனைப் போலவே புலிகளும் அநுராதபுரம், அறந்தலாவை, காத்தான்குடி, என பல இடங்களில் படுகொலைகளை நிகழ்த்தினர். இன்றும் இக்கொலைகள் தொடர்கதையாகவே உள்ளன. அண்மையில் திரியாயில் 42 சிங்கள மக்கள் புலிகளால் கொல்லப்பட்டனர். அதேபோல் தாழங்குடாவிலும் பயணிகள் பஸ் மீது நடந்த தாக்குதலில் 3 தமிழ்ப் பெண்கள் கொல்லப்பட்டு 10 பேருக்குமேல் காயமடைந்துள்ளனர். இதனைப்போன்றே பொலிசாரும், இன்ஸ்பெக்டர் ஏற்றத்தில் 103 வீடுகளை எரித்து பல அப்பாவி மக்களை சுட்டுக்காயப்படுத்தினர்.

இப்படியான கண்மூடித்தனமான தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும். அப்பாவி மக்களை கொலைசெய்பவர்கள் யாரும் உண்மையான போராளிகளாக இருக்க முடியாது. கண்மூடித்தனமான கொலைகளில் எத்தனைபேர் அநாவசியமாக தமது கணவன், மனைவி, குழந்தைகளை இழக்கின்றனர். அரசபடைகளுடன் மோதல் எனில் அது அரசபடைகளுடன் இருக்க வேண்டுமே தவிர, பொதுமக்களின் பக்கம் அவர்கள் துப்பாக்கிகளை திருப்பக்கூடாது. இதனைப்போன்றே இராணுவத்தினரும் புலிகளுடன் யுத்தம் நடத்துவது என்ற பெயரில் அப்பாவி மக்களை கொலை செய்வதை நிறுத்த வேண்டும்.

மனித உயிர்களுக்கு நாம் குறைந்தபட்ச மரியாதையாவது கொடுக்க வேண்டும். எமது போராட்டம் எல்லாமே மக்கள் சுபீட்சமாகவும், சந்தோஷமாகவும் வாழ்வதற்காகவே நடத்தப்படுவதாயின், மக்களின் கஷ்டங்களை குறைப்பதற்கு நாம் கொஞ்சமாவது முயற்சி செய்ய வேண்டும்.

அப்பாவி மக்களை யார் கொலை செய்தாலும், உலகம் அதனை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அதனை நியாயப்படுத்துவதெல்லாம் வெறும் ஏமாற்று நடவடிக்கையாகவே இருக்கும். யுத்தத்தில் ஒருசிலர் மரணமடைவது என்பது வேறு. ஆனால் பொதுமக்களையே கொலை செய்து குவிப்பதென்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

சிங்களப்பிரதேசங்களைப் பொறுத்தவரையில் இந்த நாட்டில் அமைதியும், சமாதானமும் உருவாக வேண்டுமென்பதில் தமிழ் மக்களைப்போன்றே சிங்கள மக்களும் ஆர்வமாக உள்ளனர். சிங்கள ஜனநாயக முற்போக்கு புத்திஜீவிகள் ஓர் சமஷ்டி அரசியலமைப்பு முறை உருவாக வேண்டும் என வற்புறுத்தி வருகின்றார்கள். இவர்கள் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரப்படுத்தி வருகின்றார்கள்.

ஆனால் புலிகளின் மனிதப்படுகொலைகள் என்பன இவர்களின் கைகளை கட்டிப்போட்டு விடுவது மாத்திரமல்லாமல், இவர்களின் குரல்களையும் கட்டிப் போட்டு விடுகின்றன. எனவே இப்படியான விடயங்களைக் கவனத்திலெடுத்தாவது அப்பாவிப் பொதுமக்களின் கொலைகள் நிறுத்தப்பட வேண்டும்.

இப்படியான கொலைகளை நிறுத்தக்கூடிய வல்லமை பொதுமக்களுக்கே உண்டு. புலிகளின் கோரத்தனமான கொலைகளை எம்மால் நிறுத்த முடியுமெனின், நிச்சயமாக அரசபடைகளின் அத்துமீறல்கள், அட்டூழியங்களை நிறுத்தும்படி சிங்கள மக்களே அரசைக்கோரும் நிலை உருவாகும். ஏற்கனவே சிங்கள மக்கள் மத்தியில் உள்ள சமாதானக் குழுக்கள், புத்திஜீவிகள், முற்போக்கு சிந்தனையாளர்களென பல தரப்பில் இருந்தும் இது தொடர்பாக அரசாங்கத்துக்கு நெருக்குவாரம் உண்டு. எமது செயற்பாட்டின் மூலமே இதனை அதிகரிக்க முடியும். இதனை முழுமக்களும் உணர்ந்து செயற்பட வேண்டுமெனக் கோருகின்றோம்.

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதியகண்ணோட்டம் வரவேற்கிறது. அனுப்ப வேண்டிய முகவரி:

**புதியகண்ணோட்டம்,**
**த.பெ.இல: 442,**
**கொழும்பு**

புதியகண்ணோட்டம் தொடர்பான அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

29A, வாவிக்கரை வீதி-1,
மட்டக்களப்பு.
☎ 065-2398

88/2, வாடிவீட்டு வீதி,
கல்முனை.

54, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.

22, வெளிவட்ட வீதி,
வவுனியா.

மன்னார்
☎ 023-2370

வெளிநாட்டு முகவரிகள்:

Post Bag: 1041,
Madras-17,
India.

E.P.I.C
Box No: 95,
95144, Garges Les,
Gonnesse Cedex,
France.

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

P.Fach: 100206,
44002 Dortmund,
Germany.

P.Box: 6800,
Agincourt,
Ont-MIS3C6,
Canada.

P.Fach: 506,
Bern-17,
Switzerland.

## தாக்கும் வலிமையைப் பேணுவதற்கான உபதேசங்கள்!

எதிரிகள்
மிகவுந் தொலைவில் உள்ளனர்.
அத்துடன், பெரும்பாலும்
நன்கு பாதுகாக்கப்பட்டுள்ளனர்.

எனவே உம் நண்பர்களை
எதிரிகள் என்பீர்
அவர் பற்களை
குத்தி உதிர்ப்பீர்.

இவ்வாறு
அவர்களை எதிரிகளாக்கிவிட
உம்மால் இயலும்
அதன் பின் நீவிர் புளுகலாம்:

'அவர்கட்கெதிரான போராட்டத்தில்
எழுந்து நின்று
முதல் உதை கொடுத்தவன்
நானே!'

– எரிஷ் ஃப்ரீட்

நன்றி: தாகம்(லண்டன்)

## தியாகிகள் தினம்

ஆனி 19 தியாகிகள் தினம். தமிழ் மக்களின் விடிவுக்காக போராடி தமது உயிர்களைத் தியாகம் செய்த ஆயிரக்கணக்காக போராளிகளையும், இப்போராட்டத்தில் தமது ஆருயிர் கணவன், மனைவி, பிள்ளைகள் என பலிகொடுத்து நிற்கும் ஆயிரக்கணக்கான பொதுமக்களையும் நினைவுகூரும் நாள். ஒரு கட்சியின் தலைவன், ஒரு விடுதலைப் போராளி என்பவற்றிற்கு அப்பால் மக்களுக்காகவே தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த, மனிதத்துவத்தை நேசித்த ஒரு மகத்தான மனிதன் மரணித்த நாளையே நாம் தியாகிகள் தினமாக பிரகடனம் செய்தோம்.

ஆம்! ஆனி 19 மக்களுக்காகவே மண்ணை நேசித்த தோழர் பத்மநாபா அவர்கள் படுகொலை செய்யப்பட்ட தினம். அவரும் அவருடன் சேர்ந்த பன்னிரு தோழர்களும் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட தினம்.

ஈழப்போராட்ட வரலாற்றில் 2000க்கு மேலான எமது தோழர்களையும், நூற்றுக்கணக்கான தோழர்களின் குடும்பங்களையும் நாம் பலிகொடுத்தோம். எங்களைப் போன்றே ஏனைய விடுதலை இயகங்களும் கூட நூற்றுக்கணக்கான தமது தோழர்களை பலிகொடுத்துள்ளார்கள். மொத்தத்தில் இப்போராட்ட வரலாற்றில் மரணித்த அனைவருக்கும் எமது அஞ்சலியைத் தெரிவிப்பதும் அவர்களைக் கௌரவப்படுத்துவதும் எமது முக்கிய கடமையென நாம் கருதுகின்றோம். எமக்காக எமது எதிர்கால சந்ததியினருக்காக மரணித்த மக்களையோ தோழர்களையோ நாம் மறந்துவிட முடியாது.

அவர்களை நாங்கள் கௌரவப்படுத்துவதற்காகவே இதனை தியாகிகள் தினமாக நாம் பிரகடனப்படுத்தியுள்ளோம். இது ஈ.பி.ஆர்.எல்.எவ் இற்கான தினமல்ல. மொத்தத்தில் முழுத்தமிழ் மக்களும், தமக்காக மரணித்த தமிழ் சமூகத்தை நினைவுகூர்வதற்கான ஓர் தினமாகும்.

சிறீலங்கா படைகளுக்கெதிராக ஆரம்பிக்கப்பட்ட எமது போராட்டம் – தான் என்ற அகந்தை, தனக்கு மட்டுமே என்ற பேராசை போன்றவற்றிற்குள் அமிழ்ந்து போன பிரபாகரனாலும், அவரது கூட்டத்தாலும் சின்னாபின்னப்படுத்தப்பட்டது. புலிகளால் ஏனைய இயக்கங்கள் அழித்தொழிக்கப்பட்டன. மக்களுக்காக, தமிழ் சமூகத்தின் விடிவுக்காக போராடியவர்கள் புலிகளால் மூர்க்கத்தனமாக கொன்றொழிக்கப்பட்டனர். முதுகில் குத்தியவர்கள் மாவீரர்களானார்கள்.

இதனால் சிறீலங்கா இராணுவத்திற்கெதிராக மாத்திரமல்லாமல், வடகிழக்கில் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்காகவும் நாம் போராட வேண்டியுள்ளது. சிங்கள இனவெறிக்கெதிராகவும், சமத்துவத்திற்காகவும், சமுதாய மாற்றத்திற்காகவும் போராடி உயிர் நீத்தவர்கள் ஒருபாதி; சர்வாதிகாரத்திற்கெதிராக ஜனநாயகத்தை, மக்களின் அடிப்படை உரிமைகளை மீட்க உயிர் நீத்தவர்கள் மறுபாதி. இவர்கள் ஒவ்வொருவரினது இழப்புக்களும் பெறுமதிமிக்கவை. மக்களின் நலனுக்காக மட்டுமே உயிர்நீத்தவர்கள் இவர்கள். இவர்களின் தியாகங்கள் யாவும் கௌரவப்படுத்தப்பட வேண்டும். இதனால்தான் 19ம் திகதியை தியாகிகள் தினமாக்கினோம்.

எனவே 19ம் திகதியை எமது மக்களின் மறைவைக் குறிக்கும் புனித நாளாகக் கருதி, இறந்துபோன மக்களுக்காக 2 நிமிட நேரம் அஞ்சலி செலுத்துங்கள். இயலக்கூடியவர்கள் அருகில் உள்ள கோயில்களிலோ, தேவாலயங்களிலோ இவர்களது ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்யுங்கள். எமது மக்களுக்காக மடிந்துபோன ஒவ்வொரு உயிரையும் நினைவுகூர்வோம்.

படிப்பகம்

www.padippakam.com



# இனிய தமிழ் மக்களே!...

## அன்பிற்கினிய தமிழ்பேசும் மக்களே!

அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ் உட்பட ஐந்து தமிழ் கட்சிகளை அழைத்து இனப்பிரச்சினை தொடர்பான ஓர் கலந்துரையாடலை நடாத்தினார்.

இதில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அழைப்பு விட்டிருந்தபொழுதும் கூட ஏனைய கட்சிகளுடன் தம்மை இனங்காட்டிக் கொள்ள விரும்பாததால் தாம் அக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என அறிவித்தனர். எனவே கூட்டணி தவிர்த்து, ஈபிஆர்எல்எவ், இ.தொ.கா, புளொட், ஈ.பி.டி.பி, மலையக மக்கள் முன்னணி ஆகியன இக்கலந்துரையாடலில் பங்குபற்றின.

இதில் கடந்த நாலரை மாதங்களாக அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தை தொடர்பாக அவர் மிக நீண்ட விளக்கமளித்தார். புலிகளுக்கும் தமக்கு மிடையில் ஏறத்தாழ 40 கடிதங்கள் பரிமாறப்பட்டதாகவும், அதில் குறைந்தபட்சம் 7 கடிதங்களில் அரசியல் தீர்வு தொடர்பாக பேசுவதற்கு ஓர் நேரத்தை ஒதுக்கும்படி கேட்டதாகவும் புலிகள் அதனை நிராகரித்தே வந்ததாகவும் கூறினார்.

இவைதவிர புலிகள் வைத்த 4 கோரிக்கைகளில் 2 கோரிக்கைகள் முழுமையாக ஏற்கப்பட்டதாகவும், அதாவது, பொருளாதாரத்தடையை முற்றாக அகற்றுதல், மீன்பிடித்தடையை அகற்றுதல் போன்றவை தம்மால் முழுமையாக ஏற்கப்பட்டதாகவும், பூநகரி முகாமைப் பொறுத்தவரை, தாம் 600 மீற்றர் தூரத்திற்கு பின்வாங்கியதாகவும் குறிப்பிட்டதுடன், பூநகரியை முழுமையாக உடனடியாக வாபஸ் வாங்குவதால், தான் எதிர்நோக்கக்கூடிய பிரச்சினைகளையும் குறிப்பிட்டார்.

அவர்களின் 4 கோரிக்கைகளில் இறுதியான கோரிக்கையான மட்டக்களப்பில் புலி உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் நடமாடுவதனை மாத்திரம் தாம் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் கூறினார்.

## அன்பார்ந்த தமிழ் மக்களே!

ஆரம்பத்தில் இருந்தே அதாவது சந்திரிகா பண்டாரநாயக்கா அவர்கள் மேல் மாகாண முதலமைச்சராக இருந்தபொழுதே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றே ஒரேவழி என்ற கொள்கையினை மக்கள் முன்வைத்தே அவரது கட்சி தென்மாகாணத் தேர்தலிலும், பின்னர் பாராளுமன்ற, ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றிபெற்றது. எனவே அரசியல் தீர்வொன்றில் சந்திரிகா அவர்கள் ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தார் என்றே நாம் நம்புகின்றோம்.

ஆனால் புலிகள் அரசுக்கு அதற்கான சந்தர்ப்பத்தைக் கொடுத்து அரசியல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்காமலேயே மீண்டும் யுத்தத்தை தொடங்கியுள்ளனர். இம்முரட்டுத்தனமான அணுகுமுறை புலிகளின் போராட்டத்திற்கு சர்வதேச நாடுகளின் கண்டனத்தைப் பெற்றுத் தந்ததுடன், அரசுக்கு சர்வதேச அளவில் ஆதரவை அதிகரிக்கவுமே வழிவகுத்தது.

புலிகளுடன் பேசிய பின்னரே தமது தீர்வுத் திட்டத்தை ஏனைய தமிழ் கட்சிகளுக்கு கொடுக்க இருந்ததாகவும், ஆனால் புலிகள் அரசியல் விடயங்களைப் பேச மறுத்து மீண்டும் ஓர் யுத்தத்திற்கு சென்றுள்ளதால், தாம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை தமிழ் மக்கள் முன் விரைவில் சமர்ப்பிக்க இருப்பதாகவும் கூறினார்.

தீர்வு குறித்த தமது கருத்துக்களையும் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் விளக்கிக் கூறினார்.

முதலாவதாக வட-கிழக்கு இணைப்பு என்ற விடயத்தைப் பொறுத்தவரையில் இன்றிருக்கக்கூடிய மாகாண எல்லைகளை மீள வரையறுப்பதன் மூலம் வட-கிழக்கு இணைப்பை, அல்லது வட-கிழக்கை ஒரே மாகாணமாக்க முடியும் எனக்கூறினார்.

அதிகாரங்களைப் பொறுத்தவரையில், இந்திய அரசியல் சாசனத்தை பேச்சுவார்த்தைக்கான ஆரம்பமாகக் கொள்ளலாம். ஆனால் இந்தியாவில் மாநிலங்களுக்குள்ளதை விட மிக அதிகளவு அதிகாரங்கள் கொடுக்க தாம் தயாராய் இருப்பதாகவும் கூறினார்கள்.

சட்டம் ஒழுங்கு, காணி காணிப் பங்கீடு, கல்வி போன்ற விடயங்கள் முழுமையாக மாகாணத்துக்கு வழங்கப்படுமெனவும், இன்றைய 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் உள்ள பொதுநிரலை (Concurrent list) இல்லாதொழித்து, அதிகாரங்களை தாம் மாநில அலகுக்கு கொடுப்பதாகவும் கூறினார்கள்.

அதுமாத்திரமல்லாமல், வழங்கப்படும் அதிகாரங்கள் மத்திய அரசால் மீளப் பறித்துக் கொள்ள முடியாதவாறு அரசியல் சாசனத்தில் அடிப்படை விதிகள் அமைக்கப்படுமெனவும் அவர்களால் கூறப்பட்டது.

சுருக்கமாகக் கூறுவதானால் இன்றிருக்கக்கூடிய 13வது திருத்தச் சட்டத்திலும் விட மிக அதிகளவிலான அதிகாரங்களும், தமிழ் மக்களுக்கென வட-கிழக்கு இணைந்த ஓர் அரசியல் நிர்வாக அலகை (அது மாகாண சபையாக அல்லது மாநில சபையாக இருக்கலாம்) ஏற்படுத்துவதற்கும் அரசு தயாராக உள்ளதாகத் தோன்றுகின்றது.

## அன்பான தமிழ் மக்களே!

வரலாற்றில் முதல் தடவையாக இலங்கை அரசு இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் பேசித் தீர்க்க உளமார முன்வரும் போது, நாமும் அதற்கு ஒத்துழைப்பாக இருந்தால் மட்டுமே எமது மக்கள் கௌரவமாக வாழக்கூடிய தீர்வைக் காணமுடியும்.

சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா அவர்கள் தமிழ் கட்சிகளுக்கு உறுதியளித்தவாறு முழுமையான அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைக்குமாறு ஈ.பி.ஆர்.எல்.எவ் அவரை வற்புறுத்தி வருகின்றது. அதுமாத்திரமல்லாமல் ஓர் சமஷ்டி அரசமைப்புக்குள்ளேயே இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைக் காணமுடியும் என்பதையும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வற்புறுத்தி வருகின்றது.

அதேசமயம், ஜனாதிபதி அவர்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு முழுத் தமிழ் மக்களின் ஒத்துழைப்பு இருந்தாலே அரசியல் தீர்வு சாத்தியமாகும். இதன்பொருள் அரசாங்கத்தின் யுத்த நடவடிக்கைகளுக்கு நாம் ஆதரவளிப்பதென்பதல்ல.

அரசாங்கம் ஓர் அரசியல் தீர்வுக்கு வருவதற்கு அவர்களை வற்புறுத்துதலும், இவ்வரசியற் தீர்வுக்கெதிரான புலிகளின் நடவடிக்கைகளை கைவிடுமாறு வற்புறுத்துவதும் முக்கியமான அம்சமாகும்.

## அன்புக்குரிய தமிழ் மக்களே!

முன்னர் பிரேமதாசா அரசுடன் ஓர் யுத்த நிறுத்தம் செய்து பின்னர் 2வது ஈழப்போரை தொடக்கிய புலிகள் இன்று சந்திரிகாவுடனான யுத்த நிறுத்தத்தை முறித்துக்கொண்டு 3வது ஈழப்போரை தொடக்கியுள்ளனர்.

புலிகளும், இராணுவமும் கொலை செய்யப்படுவதற்கு அப்பால் நாளாந்தம் பொதுமக்களும் கொல்லப்பட்டு அவர்களின் அற்பசொற்ப சொத்துக்களும் நாசமாக்கப்படுகின்றன.

அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கும், அரசியல் தீர்வுக்கும் தயாராக இருக்கும்போது இந்த அநியாயமான யுத்தம் தேவைதானா என்பதை மக்கள் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

90ம் ஆண்டிற்கு பிற்பட்ட காலத்தைப் போன்றே கிழக்கு மாகாணத்தில் புலிகளின் நடவடிக்கைகளும், அதற்கெதிரான இராணுவ நடவடிக்கையாலும், இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு, நாளாந்தம் சுற்றிவளைப்பு, தேடுதல், கைது, கொலை என்பன இன்று அன்றாடச் செய்திகளாகிவிட்டன.

எனவே, காலம் முழுக்க அச்சப்பட்டு அடங்கிப் போகாமல், நியாயமான எமது கோரிக்கைகளுக்காகவும் அநியாயமான ஆயுத அச்சுறுத்தல்களுக்கெதிராகவும் நாம் ஒன்றாகக் குரல்கொடுப்போம்.

எமது பிள்ளைகளை, எமது உற்றார் உறவினரை, இனியும் பலி கொடுக்காமல் அவர்களைப் பாதுகாக்க, எமது வருங்கால சந்ததியினரைப் பாதுகாக்க, அவர்களது வருங்காலத்தைச் செப்பனிட.... எம்முடைய எதிர்காலத்தை நாமே நிர்ணயிக்க துப்பாக்கிகளுக்கு அஞ்சி நாம் தொடரும் மௌனத்தைக் கலைக்க வேண்டும்.

மக்களின் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் பொறுப்பை துப்பாக்கிமுனையில் புலிகள், தம் கையிலெடுத்துக் கொண்டு மக்களின் பெயரால் தமது குறுகிய நலன்களைப் பாதுகாக்க நடாத்தும் ஓர் அர்த்தமற்ற போர் இதுவென்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**மக்கள் பிணங்களின் மீது, தமது கொலை அரசியலை நடாத்தும் புலிகளின் கொடூரத்தையும், மக்களுக்காகவே போராடுவதாகக் கூறிக் கொள்ளும் போலித்தனத்தையும் மக்கள் அடையாளம் கண்டுகொள்ளவேண்டும்.**

பயணிகள் பஸ் என்று தெரிந்தும் தாழங்குடாவில் சுட்டுத்தள்ளியதானது, 100 அப்பாவி மக்கள் செத்தாலும் பரவாயில்லை ஒரு சிங்களவனாவது சாகவேண்டும் என்ற வெறித்தனமான சிந்தனை தவிர வேறில்லை.

புலிகளைக் கொல்கிறோம் என அரச விமானப்படை குண்டுவீசுவதற்கும் புலிகளின் பயணிகள் பஸ்மீதான தாக்குதலுக்கும் என்ன வித்தியாசம்?

தமிழ் மக்கள் கண்மூடித்தனமாகக் கைது செய்யப்படுவதற்கே அரச பாதுகாப்புப்படை மீது கோபமும் எரிச்சலும் கொண்டு குரலெழுப்பும் நாம், அப்பாவி சிங்கள மக்களையும் சிறுவர்களையும் புலிகள் வெட்டிச்சாய்க்கும் போது மௌனமாயிருப்போமாயின் மனித உரிமைகள் பற்றியும், மனிதாபிமானம் பற்றியும் சமஉரிமை பற்றியும் பேச அருகதையற்றவர்களாகிவிடுவோம்.

அந்தந்த ஊர்களில் தத்தம் வீடுகளில் புலிகள் இயக்கத்திலிருக்கும் தமது பிள்ளைகளையோ, உறவினர்களையோ, அயலவர்களையோ கேள்விக்குள்ளாக்க வேண்டும். நியாயத்தை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். குறைந்தபட்சம் சாத்தியமான அளவிலேனும் மக்கள் இந்த அணுகுமுறையைக் கையாளவேண்டும்.

சிங்களவர்மேற் கொண்ட வெறுப்பால்; சிங்களவர் கொல்லப்படும்போது 'இப்படித்தான் வேணும்' என எவரேனும் கூறுவார்களேயானால்....இது ஓர் சாதனை, மக்கள் சந்தோஷப்படும் விடயம் என உங்கள் வீட்டுச் சிறுவர்கள் நினைத்துக் கொள்வார்கள். இதுவே எதிர்கால சந்ததியின் அழிவுக்கு வழி வகுக்கும்.

நாம் ஒவ்வொருவரும் உணர்ச்சிவசப்பட்ட முடிவுகளையும், வீரப்பிரதாபங்களையும் விட்டு, சமூகப்பொறுப்புடனும், யதார்த்தமாகவும் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

## எனதருமை மக்களே!

மக்களின் நலன்களை.... தேவைகளை உண்மையாகவும் நேர்மையாகவும் பிரதிபலிக்கக்கூடிய, அதற்காக புத்திபூர்வமாகவும், உறுதியாகவும் உழைக்கக்கூடிய மாற்றுச் சக்தியாக நாம் பரிணமிக்க வேண்டும.

நாமெல்லாம் ஒன்றுபட்டு அதனைப் பலப்படுத்துவதன் மூலமே அது சக்திமிக்கதாகும்; சக்திமிக்க குரலாகவும் ஒலிக்கும்.

ஓர் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியற் தீர்வுத் திட்டம் மக்கள் முன்வைக்கப்படுமிடத்து, அவை சரியாக நடைமுறைப்படுத்தப்படவும் அவற்றின் பலாபலன்கள் மக்களைச் சென்றடையவும் வேண்டுமானால்.... அதற்குத்தடையாக இருப்போரை எதிர்க்கும் அல்லது முறியடிக்கும் வல்லமையை நாம் பெற வேண்டும். இல்லையேல் அரசியல் அனாதைகளாகிப் போகும் சூழ்நிலையே ஏற்படும்.

**எனவே யுத்தமிடும் நோய்க்கு எதிராகவும் அர்த்தமுள்ள தீர்வுக்கு ஆதரவாகவும் நமது குரல் ஒன்று பட்டு ஓங்கியொலிக்கட்டும்.**


> “புலிகளைக் கொல்கிறோம் என அரச விமானப் படை குண்டு வீசுவதற்கும் புலிகளின் பயணிகள் பஸ் மீதான தாக்குதலுக்கும் என்ன வித்தியாசம்? தமிழ் மக்கள் கண்மூடித்தனமாகக் கைது செய்யப்படுவதற்கே அரச பாதுகாப்புப்படை மீது கோபமும் எரிச்சலும் கொண்டு குரலெழுப்பும் நாம், அப்பாவி சிங்கள மக்களையும் சிறுவர்களையும் புலிகள் வெட்டிச்சாய்க்கும் போது மௌனமாயிருப்போமாயின் மனித உரிமைகள் பற்றியும், மனிதாபிமானம் பற்றியும் சமஉரிமை பற்றியும் பேச அருகதையற்றவர்களாகிவிடுவோம்.”

> “ஜனாதிபதி அவர்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு முழுத் தமிழ் மக்களின் ஒத்துழைப்பு இருந்தாலே அரசியல் தீர்வு சாத்தியமாகும். இதன்பொருள் அரசாங்கத்தின் யுத்த நடவடிக்கைகளுக்கு நாம் ஆதரவளிப்பதென்பதல்ல. அரசாங்கம் ஓர் அரசியல் தீர்வுக்கு வருவதற்கு அவர்களை வற்புறுத்துதலும், இவ்வரசியற் தீர்வுக்கெதிரான புலிகளின் நடவடிக்கைகளை கைவிடுமாறு வற்புறுத்துவதும் முக்கியமான அம்சமாகும்.”

படிப்பகம்

www.padippakam.com






அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட தோல்வி, 90ம் ஆண்டு காலப்பகுதிக்கு நாட்டை மீண்டும் இழுத்துச் சென்றுள்ளது. யுத்தம் ஆரம்பித்ததன் பின்னர் தினமும்கிழக்கில் பொதுமக்கள் தாக்கப்படுவதும் உயிரிழப்பதும் தொடர்ந்த வண்ணமுள்ளன.

புலிகளுக்கெதிரான நடவடிக்கை என்ற பெயரில் பொதுமக்கள் கண்மூடித்தனமாக தாக்கப்படுவதும், கொல்லப்படுவதும், யுத்தத்திற்கிடையில் அகப்பட்டுக் கொண்டார்கள் என்ற பெயரில் அரசாங்கம் இக்கொலைகளை நியாயப்படுத்துவதும் எவ்விதத்திலும் பொறுப்பான செயலல்ல.

சமாதானத்தை முன்வைத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தின் இத்தகைய பொறுப்பற்ற செயல்கள் தமிழ் மக்களுக்கு அரசின் சமாதான முயற்சிகளில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தும் என்பதை சந்திரிகா அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

> “அரசியல் தீர்வு முன்வைத்தல் என்னும் விடயத்தில் உள்ள காலதாமதம், இன்னும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை சந்திரிகா அரசு புரிந்துகொள்ள வேண்டும்.”

திருமலை கட்டுமுறிவுக்குளம் கிராம மக்கள் மீதான தாக்குதலில் பொதுமக்கள் உயிரிழந்ததுடன் மூன்றாவது தடவையாகவும் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

இலுப்பைக்குளத்தில் இராணுவத்தின் பாதுகாப்பிற்கென அங்கிருந்த மக்கள் பலாத்காரமாக அப்புறப்படுத்தப்பட்டு, 14 வீடுகள் புல்டோசர் இயந்திரத்தினால் முற்றாகத் தகர்க்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பூழாக்காடு, பெண்டுகள் சேனை வயல் பிரதேசங்களில் வயல்வாடிகள் எரிக்கப்பட்டு அங்கிருந்த மக்கள் துரத்தியடிக்கப்பட்டுள்ளனர்.

பொத்துவில் இன்ஸ்பெக்டர் ஏற்றத்தில் 103 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இலுப்படிச்சேனை, இருதயபுரம், ஜெயந்திபுரம், மூதூர் கட்டைபறிச்சான் கிராமங்களில் பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு புதூர், கிரான், கோரகல்லிமடு, கும்புறுமூலை, காரைதீவு பகுதிகளில் பெண்கள்மீது இராணுவம் பலாத்கார முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

அத்துடன், துறைநீலாவணை, கல்லாறு, களுவாஞ்சிக்குடி, கிருக்கோவில் பகுதிகளில் சுற்றிவளைப்பின்போது பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டில் சமாதானம் என்ற பெயரில் மூடப்பட்டிருந்த அகதிமுகாம்கள் மீண்டும் அவசரமாக திறக்கப்படுவதும், புலிகளுக்கெதிரானவை என்ற பெயரில் தமிழ் மக்களை அழிக்க முற்படுவதும் சமாதானம், அரசியற் தீர்வு சாத்தியம்தான் என்ற சந்தேகத்தையே ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்ப் பிரதேசங்களில் அறிவிக்கப்படாத ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கிறது. அம்பாறை மாவட்டத்தில் மாலை 6 மணிக்குப் பின்னர் யாரும் நடமாட முடியாது. அன்றாட காரியங்களை செய்வதில் சிரமத்துக்குள்ளாகும் பொதுமக்கள் மேல் யுத்தச் சூழலின் நெருக்குவாரங்கள், மீன்பிடித்தடையால் பொருளாதாரப் பாதிப்பு போன்றவை அரசு தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தத்தை தொடுத்துள்ளது என்றே நினைக்கத் தூண்டுகிறது.

அத்துடன் புலிகளின் சிங்கள மக்கள் மீதான காட்டுமிராண்டித்தனமான படுகொலைகள் எந்தத் தரப்பினராலும் நியாயப்படுத்தமுடியாத கொடூரமான செயலாகும்.

திருகோணமலை கலறாவ கிராமத்தின் மீதான புலிகளின் கொலைவெறியில் 42 பொதுமக்கள் பெண்கள் குழந்தைகள் உட்பட கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு தாழங்குடா பிரயாணிகள் பஸ்மீது புலிகள் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் 3 தமிழ்ப் பெண்கள் கொல்லப்பட்டதுடன் 10 பொதுமக்களும் காயத்துக்குள்ளானார்கள்.

நாட்டில் இன மோதலையும், அழிவுகளையும் எற்படுத்த முற்படும் புலிகளுக்கு எந்த மக்கள் மீதும் அக்கறையில்லை என்பதையே இது காட்டுகிறது. நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்க முற்படும் சக்திகள் அனைவராலும் இது கண்டிக்கப்பட வேண்டியது.

அமைதியிலும் சமாதானத்திலும் இந்த அரசுக்கு உண்மையான அக்கறை இருக்குமானால் தமிழ் மக்களுக்கெதிரான நடவடிக்கைகள் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

பொதுமக்கள் எல்லோரும் புலிகளல்ல. புலிகளையும் தமிழ் மக்களையும் வேறுபடுத்திப் பார்க்கும் நிலையை உருவாக்கினால் மாத்திரமே அது சாத்தியமாகும்.

இராணுவத்தின் அப்பாவிப் பொதுமக்கள் மீதான கண்மூடித்தனமான தாக்குதல்கள் நிறுத்தப்படுவதுடன் மனித உரிமை மீறல்களுக்கெதிரான பணிக்குழு உடன் இயக்கப்படுவதுடன், சகல மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

சந்திரிகா தமிழ்க்கட்சிகள் சந்திப்பின்போது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரதிநிதிகள் நாட்டின் அரசியல் தீர்வின் அவசியத்தை வலியுறுத்தியதுடன் இக்கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

> “நாட்டில் இன மோதலையும், அழிவுகளையும் ஏற்படுத்த முற்படும் புலிகளுக்கு எந்த மக்கள் மீதும் அக்கறையில்லை என்பதையே இது காட்டுகிறது. நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்க முற்படும் சக்திகள் அனைவராலும் இது கண்டிக்கப்பட வேண்டியது.”

எமக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நம்பிக்கையளித்திருப்பினும், அரசியல் தீர்வு முன்வைத்தல் என்னும் விடயத்தில் உள்ள காலதாமதம் இன்னும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை சந்திரிகா அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

நாட்டில் அமைதியை ஏற்படுத்த சந்திரிகா அரசு முயற்சித்த வேளையில் யுத்தம் மீண்டும் புலிகளால் ஆரம்பிக்கப்பட்டது.

சமாதானத்திற்கான கதவுகள் இன்னும் மூடப்படவில்லை. புலிகள் தாங்களாகவே தொடங்கிய இந்த யுத்தத்தை உடன் நிறுத்திவிட்டு, தமிழ் மக்களின் அரசியற் தீர்வுக்கு பேச்சுவார்த்தைகளை தொடங்க வேண்டும் என்பதே மக்களின் விருப்பமாகும்.

மக்களின் அபிலாசைகளுக்கு எதிராக புலிகள் செயற்படுவது மக்களுக்கு செய்யும் துரோகமாகும். மக்களுக்கு எதிராக நின்றவர்கள் நிலைத்திருப்பதில்லை என்பது ஒரு வரலாற்று உண்மையாகும்.

**- சோலையூரான்**




**ஏ.எல். அமீர் ஹுசைன்**
**கல்முனை - 3.**

**பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்த பின்னர் நடந்த பேச்சுவார்த்தையும் மோதல் தவிர்ப்பும் தொடர்ந்து நடைபெறாமல் முறித்துக் கொண்டவர்கள் புலிகள் என்று அரசாங்கம் கூறுகின்றதே இதில் உங்கள் அபிப்பிராயம் என்ன?**

பதில்: அரசாங்கம் யாழ் செல்லும் பொருட்களுக்கான தடையை பெருமளவு நீக்கியபோதும் நடைமுறையில் தாண்டிக்குள ராணுவ சோதனைச் சாவடியில் கெடுபிடிகள் இருந்தன என்பது உண்மை. மோதல் தவிர்ப்பு மீறப்பட்டவுடன், உடனடியாகவே பழையபடி பொருட்கள் தடை அமுலுக்கு வந்த வேகமும் ராணுவ நிர்ப்பந்தத்தைக் காட்டுவது. ஆனால் அரசியல் தீர்வைப் பற்றிப் பேசுவதற்குப் புலிகள் ஏன் பின்னடித்து வந்தார்கள் என்பதும், அத்தனை அவசரமாகத் தாக்குதலை ஆரம்பித்தார்கள் என்பதும் புலிகள் தரப்பை நியாயப்படுத்த முடியாத விஷயங்கள். அரசியல் தீர்வொன்றினூடாக மாத்திரமே தீர்க்கப்பட வேண்டிய-தீர்க்கப்படக்கூடிய இந்தப் பிரச்சினையை அநாவசிய நிபந்தனைகளைப் போட்டுப் புலிகள் குழப்பியடித்தார்கள் என்பதுதான் உண்மை.

**எம். முருகேசன்**
**வவுனியா.**

**ஏனைய தமிழ்க்கட்சிகள் கேட்டும் தளர்த்தப்படாத கடல்வலயத்தடை, பொருட்கள் தடை புலிகள் கேட்டபோதுதானே தளர்த்தப்படுகிறது?**

பதில்: இதன் மறுபக்க உண்மை என்னவென்றால் புலிகளின் தேவையற்ற யுத்தத்தினால்தான் இந்தத் தடைகளும் இருக்கின்றன என்றாகிறது. பொருட்கள் விநியோகம், கடலில் மீன்பிடித்தல் போன்றவற்றை ஒரு குழு சண்டைக்காகப் பயன்படுத்திக் கொள்கிறது என்பதால்தான் அதற்கான தடைகளும் வருகின்றன. எனவே அந்தக்குழு மோதல் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொள்ளும்போது தடைகளை அகற்றுவது சாத்தியமாகிறது. திரும்பவும் மோதலை ஆரம்பிப்பதால் தடைகளும் வருகிறது, மக்களுக்கு உயிர்ப்பயக் கஷ்டத்தோடு இந்தக் கஷ்டங்களும் திணிக்கப்படுகிறது.

**கு. சண்முகநாதன்**
**மட்டக்களப்பு.**

**புலிகளின் தலைவர் மறைவிடத்திலிருந்து வெளிவந்தால் மற்ற எந்தச் சூழ்நிலையிலும் தமது உயிருக்கு ஆபத்து என்பதால்தான் போர்ச் சூழல் தொடருவதையே அவர் விரும்புகிறார் எனக் கூறப்படுகிறதே?**

பதில்: மறுபடியும் மறுபடியும் யுத்தத்தை தொடங்கும் விதம் அப்படித்தான் உணர்த்துகிறது. பயங்கரவாதிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு வந்தால்தான் தீர்வுபற்றிப் பேசமுடியும் என்று அரசாங்கம் சொன்னால் அது எவ்வளவு முட்டாள்தனமோ அதுபோன்றதொரு குழப்பல்தனம்தான் தீர்வைப் பேசுவதற்கு முன் ராணுவ நிலைகளை வாபஸ் பெறவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்பதும், யுத்தம் செய்து கொண்டிருக்கிறவர்கள் தங்களுக்கிடையே ஒருவரை மற்றொருவர் ராணுவ ரீதியாகப் பலவீனப்படும்படி சொல்வதை நிபந்தனையாக முன்வைக்க முடியாது.

கடந்த அரசாங்கங்களைப் போலல்லாது "இந்த நாட்டிலுள்ள பிரச்சினை வடக்கு கிழக்கிலுள்ள பயங்கரவாதப் பிரச்சினை அல்ல, நாட்டின் தேசியப் பிரச்சினை; இதற்கான அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை முன்வைத்து தீர்வுகாண விரும்புகிறோம்" என்று சொல்கிறது சந்திரிகா அரசு. அந்தத் தீர்வை வைப்பதற்கு அனுமதித்து, விவாதித்த பிறகு, தமிழ் மக்களுக்கான நியாயமான உரிமைகளைக் கூட அரசாங்கம் தனது தீர்விலே தரமுடியாமல் போனால், அதன் பிறகு போரைத் தொடங்கினால், அதில் மக்களின் நலன் குறித்த அர்த்தமேதும் இருந்திருக்கும்.

**ஆர். துரைமனோகரன்**
**கொழும்பு-13.**

**தமிழ்க்கட்சிகளை அழைத்துப் பேசியபோது பாராளுமன்றத்தில் ஆசனமில்லாத ஈ.பி.ஆர்.எல்.எவ். ஐ அழைத்த ஜனாதிபதி எங்களை அழைக்காதது ஏன் என்று கேட்கிறாரே சிறிகாந்தா?**

பதில்: அவர்கள் யூ.என்.பி. யிடம் பணம் வாங்கிக்கொண்டு செயற்பட்டு வருகிறார்கள் என்று அரசாங்கம் நினைப்பதுதான் காரணம் (எல்லாவற்றையும் வெளிப்படையாகச் சொன்னால்தான் சிறீக்கு விளங்குமாக்கும்)

பதில்கள் தொடர்ச்சி.... பக். 9

இரகசியமாக வைத்துக் கொள்கிறேன் என்று மற்றவர்களிடம் உறுதி அளித்தவர்களிடமிருந்து நான் வழக்கமாகச் செய்திகளைச் சேகரிக்கிறேன்.
- வோல்டர் வின்செல்

படிப்பகம்

www.padippakam.com



# பிரபாகரனை நாடுகடத்த இந்தியா கோரிக்கை இது வெறும் சட்ட நடவடிக்கை மட்டும்தானா?

க. சர்வேஸ்வரன்

1991 மே மாதம் இந்தியப் பொதுத் தேர்தலின் உச்சக் கட்டப் பிரச்சாரங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. தமிழ் நாட்டில் ஸ்ரீபெரும்புத்தூரில் பிரச்சாரத்திற்காக ராஜீவ் காந்தி அவர்கள் வந்தார். புலிகளின் தற்கொலைப்படையைச் சேர்ந்த தனு என்ற பெண், மாலைபோடப் போவதுபோல் சென்று இடுப்பில் கட்டியிருந்த குண்டை வெடிக்க வைத்து தானும் சிதறியதுடன், ராஜீவ் உட்பட 16இற்கும் அதிகமானோரை பலியெடுத்தாள்.

இக்கொலைப் படையைப் பிடிக்கும் இந்திய உளவுத்துறையின் தீவிர வேட்டையின் போது பயிற்சி பெற்ற 27 புலிகள் கைது செய்யப்படும் நிலையில் சயனைட் தின்று தற்கொலை செய்தனர்.

இக்கொலைக்குழுவின் நிறைவேற்றுப் பொறுப்பாளர் சிவராசன் எனப்படும் பாக்கியநாதனும், அவரது சகாவான சுபா உட்படப் பலரும் பெங்களூரில் கைது செய்யப்படும் நிலையில் தற்கொலை செய்துகொண்டனர்.

கொலை செய்யப்பட்ட இடத்தில் (கூட்டத்தில்) எடுக்கப்பட்ட புகைப்படங்கள், வீடியோப் படம் உட்பட தெளிவான ஆதாரங்களில் கொலைக்குழுவில் அங்கம் வகித்ததுடன் கொலையை செய்து முடிக்கும்வரை நேரடியாகப் பங்குபற்றியவர்களான புலி உறுப்பினர் முருகன் அவரது இந்தியக் காதலி நளினி போன்றோரும், இக்குண்டைத் தயார் செய்த அறிவழகன் போன்றோரும் சிவராசன், சுபா உட்பட கொலைக்குழு உறுப்பினர்களை சென்னையிலிருந்து பெங்களூருக்கு எண்ணெய்த்தாங்கியில் மறைத்துக் கொண்டு சென்ற வாகன சாரதி உட்பட ஏராளம் பேர் உயிருடன் கைது செய்யப்பட்டு இன்னும் சிறையில் உள்ளனர்.

## 'சர்வதேசப் புகழ்' அடைந்த புலிப் பயங்கரவாதம்

இக்கொலையின் முழு விபரத்தையும் இவ்வுலகமே அறிந்திருக்கும்போது சர்வதேச தொடர்பு சாதனங்கட்கு பேட்டியளிக்கும் பிரபாகரன் "நாம் அதைச் செய்யவேயில்லை" என்பதும், "எம்மீது பழிசுமத்துகிறார்கள்" என்பதும், ஆதாரங்களைக் குறிப்பிட்டு கேட்டுவிட்டால் "நிரூபிக்கட்டும் பார்க்கலாம்" எனப் பதிலளிப்பதும் பள்ளிக்கூடச் சிறுவர்கள் சொல்லும் பொய்போல் நகைப்புக்குரியதாகும்.

புலிகளின் சகோதரப்படுகொலைகளும் அரசியல் தூரதிருஷ்டியற்ற, சர்வாதிகாரத்தனமான இராணுவ அணுகுமுறைகளும், அனுதாபத்துடன் நோக்கப்பட்ட ஈழ விடுதலைப் போராட்டத்தை ஓர் பயங்கரவாதப் பிரச்சினையாக குறுக்கிவிட்டது.

இச் சர்வதேச அபிப்பிராய மாற்றம் ராஜீவ் காந்தி கொலையுடன் ஏறத்தாழ முழுமை பெற்றது. இலங்கைத் தமிழர்கள் சர்வதேச அரங்கில் தலைகுனிந்தனர். புலிகள் இலங்கைப் பயங்கரவாதிகள் என்ற தரத்திலிருந்து சர்வதேச பயங்கரவாதிகளாக அங்கீகாரம் பெற்றனர்.

இலங்கைத் தமிழர் போராட்டத்தை ஆதரிக்கும் பத்திரிகைகள், கட்சிகள், தொடர்பு சாதனங்கள் அனைத்தும் இக்கொலைஞர்களை சர்வதேசப் பயங்கரவாதிகள் என்றே வர்ணித்தன.

இந்தியாவில் அகதிகளாக இருந்த ஒன்றேமுக்கால் லட்சம் அகதிகளும், அந்த மக்களால் வெறுப்புடனும் விரோதத்துடனும் பார்க்கப்பட்டனர். அவர்கள், அகதி வாழ்க்கைக்குக் கூட கெஞ்சிக் கூத்தாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

பல மேற்கத்தேய நாடுகள் இலங்கைத் தமிழர் விடயத்தில் தமது கட்டுப்பாடுகளை இறுக்கின.

மக்களைக் காக்கிறோம், மக்களைப் பாதுகாக்கிறோம் என மார்தட்டும் புலிகளின் அடக்குமுறை தாங்கமுடியாமல் அகதிகளாக வெளிநாடு சென்றவர்களும், இராணுவ அடக்குமுறையால் அகதியானவர்களும், அப்பாவித் தமிழ் அகதிகளும் தமிழ் மக்களின் பாதுகாவலர்களால்(?) அண்டை நாடுகளில் அகதியாகவேனும் அமைதியாக வாழமுடியாமற் செய்யப்பட்டனர்.

ஆக, புலிகள் சர்வதேசப் பயங்கரவாதிகள் எனச் சான்றிதழ் பெற்றது மட்டுமன்றி, "தாம் பெற்ற சான்றிதழ் பெறுக இத்தமிழ் மக்கள்" என தமிழ் சமுதாயத்தையே பயங்கரவாதிகளாக சந்தேகத்துடன் பார்க்கும் நிலையை ஏற்படுத்திவிட்டனர்.

## அமைதி வந்தால் அவருக்குப் பாதுகாப்பின்றிப் போகும்

ராஜீவ் கொலை தொடர்பாக இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் கொலையாளிகளில் சிலரை உயிருடன் பிடித்துவிட்டதென்பதும், ஏறத்தாழ முழுவிபரங்களையும் ஆதாரங்களையும் எடுத்துவிட்டதாலும், வழக்கு நடைபெறும் பட்சத்தில் தெட்டத்தெளிவாக இவை நிரூபிக்கப்படும் என்பதும், அவ்வாறு நிரூபிக்கப்படும் பட்சத்தில் கொலையின் சூத்திரதாரியான பிரபாகரன் பிடிபட்டாலும் பிடிபடாவிட்டாலும் இந்திய நீதிமன்றத்தால் கொலைக் குற்றவாளி என்பது நிரூபிக்கப்பட்டு தண்டனை அறிவிக்கப்படுவதென்பதே அவரை ஓர் கிரிமினல் குற்றவாளியாகவே உலகுக்கு காட்டும். அவர் எந்தநேரமும் கைது செய்யப்படலாம் – அமைதிவழிக்கு வந்தாலும்கூட.

எனவே இவ்வழக்கில் கொலை தொடர்பான பயனுள்ள சாட்சியங்களை கடத்த அல்லது கொலை செய்ய சில அதிகாரிகட்கு கோடிக்கணக்கில் பணத்தைக் கொடுத்து சிறையிலிருந்து தப்பவைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. சிலர் தப்பியோட ஒழுங்கு செய்யப்பட்டது.

கிருபன் போன்றவர்களும், அண்மையில் சென்னை மத்திய சிறையில் இருந்து சிலரும் தப்பினர். கோடிக்கரை சண்முகம், மேலும் ஒருவர் தற்கொலை செய்துகொண்டனர் அல்லது கொலை செய்யப்பட்டனர்.

இப்படி சாட்சிகளை அழிப்பதற்கான இவர்களது பகீரதப் பிரயத்தனங்களும் பகிரங்கமானவை.

இவை ஒருபுறமிருக்க, உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கிய குறிப்பாக இந்தியாவையே அதிர வைத்த இக்கொலையுடன், இந்திய அரசியலில் புலிகள் ஓர் நிரந்தர தலைவலி அம்சமாக மாறிவிட்டார்கள். குறிப்பாக அங்குள்ள அரசியல் தலைவர்களின் பாதுகாப்பு போன்ற விடயங்களில் அங்கு மாற்றங்கள் தேவைப்பட்டது.

## புலிகளின் அழிக்கும் ஆற்றலும் இந்திய அரசியல் நகர்வுகளும்

எதிர்ப்புவாதம், அங்கிருக்கக்கூடிய சில பிரிவினைவாத சக்திகளை புலிகள் அழிவுவேலைகளுக்காகப் பயன்படுத்தக்கூடும் என்ற சந்தேகம் போன்றவை இந்திய அரசியலில் தொடர்ந்து முக்கிய இடத்தினைப் பெற்று வருகிறது. இந்தியாவின் சிறந்த தேசியத் தலைவரும் சிறந்த சர்வதேசத் தலைவர்களில் ஒருவருமான தமது தலைவரைக் கொன்ற புலிகளை மன்னிக்க இந்திய மக்களோ, கட்சி வேறுபாடுகளைத் தாண்டித் தேசியத் தலைவர்களோ தயாராக இல்லை.

எனவே புலிகள் என்ற கொடிய பயங்கரவாத இயக்கம் அழிக்கப்பட வேண்டும் என்ற கருத்து அங்கு வளர்ந்தே வருகிறது.

புலிகளின் மீதான சட்ட நடவடிக்கைகள் பல்வேறு காரணங்களால் காலதாமதமாகி இன்று இவ் வழக்கின் ஆயிரத்திற்கு மேற்பட்ட சாட்சிகளில் 136 பேர் மட்டுமே நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுள்ளனர். கொலை நடந்து 4 ஆண்டுகள் ஆகியும் வழக்கு பாதியளவு கூடத் தாண்டவில்லை என்பது பொதுவாக இந்திய மக்களுக்கும் குறிப்பாக ராஜீவ் காந்தி விசுவாசிகட்கும் விரக்தி தரும் ஒன்றாகும்.

இவ்வகையில் இந்திய காங்கிரஸ் கட்சியில் தலைமைக்கு விரும்பிய அர்ஜுன்சிங் போன்றவர்கள், வழக்கு தொடர்பாக காலதாமதத்திற்கு மக்கள் அரசுமீது தொடுக்கும் குற்றச்சாட்டைத் தமது கையிலெடுத்து கட்சிக்குள் குழு சேர்ப்பதற்கும் ராஜீவ்காந்தி விசுவாசிகளை தமது பக்கம் இழுப்பதற்கும் இதனைப் பயன்படுத்தியதுடன் கட்சியை உடைப்பதிலும் வெற்றிகண்டுள்ளனர்.

எனவே புலிகளின் தலைவர் பிரபாகரன், உளவுத்துறைத் தலைவர் பொட்டம்மான், பெண்கள் புலித்தலைவி அகிலா ஆகியோரை பிடித்துத் தரும்படி, இரண்டு ஆண்டுகள் காலதாமதத்தின்பின் இந்தியா கேட்கிறதென்பதுதான் உண்மை.

புலிகளின் வளர்ந்துவரும் அழிக்கும் ஆற்றலும், பலமும் இலங்கை, இந்தியாவில் மட்டுமல்லாமல் பல நாடுகள் இன்று இந்த ஆபத்தின் அறிகுறியை உணர்ந்துள்ளன. எனவேதான் இன்று பகிரங்கமாகவே உலகநாடுகள் புலிகளைக் கண்டிக்கத் தொடங்கிவிட்டன.

## நாடு கடத்தும் கோரிக்கை சட்ட நடவடிக்கை மட்டுமல்ல

இலங்கைப் பிரச்சினைத் தீர்விற்கு இந்திய இலங்கை உடன்பாடு எய்தப்பட்டு அதை நிறைவேற்ற அமைதிப்படையும் வந்தது. அழைத்த பின் இலங்கை அரசு ஒத்துழைக்க மறுத்ததாலும், புலிகளும் அதற்கு உடந்தையாக இருந்ததாலும் அது சரிவர நிறைவேறவில்லை.

எனவே அதன் பின் இலங்கை விடயத்தில் இந்தியாவின் தலையீடு இல்லை என்ற அளவுக்கே 5 ஆண்டுகளாக இருந்தது. அன்று குறுகிய அரசியற் காரணங்களுக்காக இந்திய அரசுடன் ஒத்துழைக்க மறுத்த இங்குள்ள கட்சிகள் பெரும்பாலும் அன்று தாம் விட்ட பிழையை உணர்வதுடன், இந்தியா உதவிக்கு வரவேண்டும் என எதிர்பார்க்கிறார்கள்.

(11

> ....விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும், அவரது இரு சகாக்களான பொட்டு அம்மான், அகிலா ஆகியோரையும் நாடுகடத்துமாறு இலங்கையிடம் இந்திய அரசு முறைப்படி கோரிக்கை விடுத்திருப்பதாக மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் கடந்த சனிக்கிழமை பாராளுமன்றத்தில் விடுத்த அறிவிப்பு, இலங்கை தொடர்பான கொள்கையைப் பொறுத்த விடயங்களில் கடந்த பல மாத காலமாகக் காட்டி வந்த தயக்கத்தை புதுடில்லி தூக்கியெறிந்து விட்டது என்பதை உணர்த்தும் வரவேற்கத்தக்க அறிகுறியாகும்.
>
> புலிகளின் தலைவர்களை நாடுகடத்துமாறு கொழும்பைக் கேட்பதற்கு தீர்மானித்தன் மூலமாக இந்தியாவில் புலிகள் செய்த பயங்கரமான கைங்கரியம் இந்தியாவின் சுயாதிபத்தியத்தைமீறும் ஒரு விவகாரமாக கணிக்கப்பட வேண்டும் என்பதையும் அதற்கு கடுமையான பதில் கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் புதுடில்லி இறுதியில் அங்கீகரித்திருக்கிறது.
>
> புலிகளின் தலைவர்களை நாடு கடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கொழும்பைக் கோரிய இந்திய அரசின் திடீர்ச் செயல், முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியைக் கொலை செய்தவர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக அரசு அக்கறையின்றி இருந்ததாக காங்கிரஸ் கட்சிக்குள் ஒரு சாரார் தெரிவித்த குற்றச்சாட்டுகளுக்கும் அவர்கள் விடுத்த நெருக்குதல்களுக்கும் அடிபணிந்த ஒரு கைங்கரியமாக இருக்கக்கூடும்.
>
> ஆனால் நாடு கடத்தல் கோரிக்கை அத்தியாவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய தீர்மானம் என்ற உண்மையை அரசியல் நிர்ப்பந்தங்கள் எவ்வகையிலும் திசை திருப்புவதற்கில்லை. பிரபாகரன் நாடுகடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை இந்தியாவின் சுயாதிபத்தியத்துக்கு செய்யப்பட்ட நிந்தனைக்கு பழி வாங்க வேண்டுமென்பதில் இந்தியாவுக்கு இருக்கும் அவாவையும், முன்னாள் பிரதமர் ஒருவர் கொலை செய்யப்பட்டதன் காரணமாக உருவான ஆத்திரத்தையும் வெளிக்காட்டும் ஒரு விடயம் என்பதை விட, புலிகளும் அவர்களின் கொள்கையும் பிராந்தியம் முழுவதினதும் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் பாரதூரமான அச்சுறுத்தலாக இருக்கின்றன என்பதை இந்தியா அங்கீகரித்திருப்பதையே குறித்து நிற்கிறது எனலாம்.
>
> பிரபாகரனையும் அவரது சகாக்களையும் நாடு கடத்தக் கோரும் விடயத்தில் இதுநாள்வரை புதுடில்லி காட்டிவந்த தயக்கத்திற்கு ஒரு வெளிப்படையான காரணம், அத்தகையதொரு கோரிக்கை விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுத்தும் விபரீதமான முயற்சியொன்றில் இறங்கியிருந்த இலங்கை ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் கரங்களை பலவீனப்படுத்திவிடும் என்பதே. விடுதலைப் புலிகளின் துரோகத்தனமான நிலைப்பாட்டின் விளைவாக சமாதான முயற்சிகள் முறிவடைந்து போனமை விடுதலைப் புலிகள் மீதான அருவருப்பை மிகவும் கடுமையான தொனியில் இந்தியா வெளிப்படுத்தவதற்கு இலகுவான சூழ்நிலையை உருவாககிவிட்டது.
>
> புலிகள் சமாதானத்தை குழப்பியடிக்கும் சதிகாரர்கள் என்பதை அம்பலப்படுத்த வேண்டும். அத்துடன் தமிழ் அரசியலில் அவர்களது ஆதிக்கப்பிடி தகர்க்கப்பட வேண்டும். இலங்கை அரசாங்கம் அதன் மாகாணங்களுக்கு கூடுதலான அதிகாரங்களை பரவலாக்கம் செய்து சகல பிரஜைகளினதும் ஜனநாயக உரிமைகளைப் பலப்படுத்தும் பணியில் மிகவும் அவசரமாக ஈடுபட வேண்டும். இது மிகவும் முக்கியமானதாகும்....
>
> \- THE HINDU (June 07) ஆசிரிய தலையங்கத்தில்

> 20ம் நூற்றாண்டின், கொஞ்சமும் ஈவிரக்கமற்ற, மிகவும் திறமை வாய்ந்த ஒரு கெரில்லா அமைப்பு இது. எதிர்க்கிற ஒவ்வொரு நபரையும் சுட்டுக் கொல்கிற கொடூர மனசு படைத்த ஒருவருடன் பேசுகிறோம் என்பதை மனதில் வைத்துதான் முடிந்தவரை முயற்சி செய்தோம். ராஜீவ்காந்தியைக் கொல்வதற்குக் கூட ரத்தத்தை உறைய வைக்கும் ஒரு வழியைத்தான் பிரபாகரன் தேர்ந்தெடுத்தார்.
>
> \- 'இந்தியா டுடே' பேட்டியில் சந்திரிகா

படிப்பகம்

www.padippakam.com



# தியாகிகள் தினம்




சித்திரச் சோலைகளே! உமை நன்கு
திருத்த இப் பாரினிலே - முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்த
ரோ! உங்கள் வேரினிலே.

தாமரை பூத்த தடாகங்களே! உமைத்
தந்த அக் காலத்திலே - எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே.

- பாரதிதாசன்



**தங்கள் ஒளியை சமூகத்திற்கு அளித்துவிட்டுப் பலியானவர்கள்!**
**மக்களை அடக்குமுறையிலிருந்தும், அழிவுகளிலிருந்தும் மீட்டு, சுபிட்சமான எதிர்கால சமுதாயத்தை உருவாக்கும் இலட்சியத்திற்காகத் தங்கள் உயிர்களைப் பரிசாகக் கொடுத்தவர்கள்!**
**இனிப் பிறக்கப் போகும் குழந்தைகளின் விழிகளை யுத்தத்தின் கோர நெருப்புத் தீண்டாமலிருக்க வேண்டுமென்பதே அவர்கள் தியாகத்தின் நோக்கமாக இருந்தது.**

படிப்பகம்

www.padippakam.com



# மறக்கடிக்கப்பட முடியாதவர்கள்

ஆனி 19ம் திகதி நம் சுதந்திரத்திற்காகவும், ஜனநாயகத்திற்காகவும் போராடி மரணித்த எம் தோழர்களை, போராளிகளை, மக்களை நினைவு கூரும் தினமாக பிரகடனம் செய்துள்ளோம்.

தமிழர்களின் போராட்டம் எப்போதும் ஒரு சீரானதாக இருந்ததில்லை. கரடுமுரடானதாக, இடரும், பேரபாயமும் நிறைந்த கடினமான ஒரு பயணமாக அமைந்திருக்கிறது.

தேசிய விடுதலைக்காக மாத்திரமல்ல போராட்டத்தை ஜனநாயகமயப்படுத்த பல்வேறு சக்திகளின் பங்களிப்பை உறுதி செய்வதற்காகவும் பலர் தமது இன்னுயிரைத் தியாகம் செய்துள்ளார்கள்.

அந்தவகையில் தேசியவீரர் தினம், மாவீரர் தினம் போன்றவற்றிலிருந்து தியாகிகள் தினம் அடிப்படையிலேயே வேறுபட்டது.

> “ ஒரு ஆரோக்கியமான போராட்டத்திற்கு மக்களின் உள்ளார்ந்த ஆற்றல் அனைத்தும் உள்வாங்கப்பட வேண்டும். நண்பர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். ஆனால் எமது தேசத்தில் உள்ளார்ந்த ஆற்றல் சிதைக்கப்பட்டதோடு, நண்பர்களை விரோதித்துக் கொண்ட துரதிர்ஷ்ட சம்பவங்களே அதிகமாகக் காணப்படுகிறது. உண்மைகள் துரோகம், வஞ்சகத்தினுள் மூழ்கடிக்கப்பட்டு விட்டன. ”

பேரினவாத சக்திகள் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்க விளைந்தன. புலிகளோ தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் பல்வேறு தரப்புகளினதும் செயற்பாட்டை நிராகரித்தது. ஜனநாயகத்தை துச்சமாக மதித்தது.

இந்த இரண்டுவிதமாக போக்குகளுக்கு மெதிராகப் போராடி மரணித்தவர்களின் தியாகங்கள் சமூகத்தின் கணிப்பிற்குரியவை, மரியாதைக்குரியவை.

இந்தப் பாதையில் போராட்டத்தை தலைமையேற்று நடாத்தியவர் தோழர் பத்மநாபா என்றால் அது மிகையில்லை.

மக்களை முன்நின்று நடாத்துபவன் அன்பினால் வழிநடாத்தப்பட வேண்டும் என்று கூறுவார்கள். மனித உரிமைகள், ஜனநாயகம்மீது ஆழமான நம்பிக்கைகளை அவன் கொண்டிருக்க வேண்டும்.

இவை இன்று எமது சமுதாயத்தில் காண்பதற்கரிய விடயங்களாகிவிட்டன. எனவே இவ்வாறான உயர்ந்த குணாதிசயங்களைக் கொண்ட மனிதர்களை நம் முன்னோடிகளாகவே கருத வேண்டும்.

அந்த வகையில் ஆனி 19ம் திகதி ஒருமுக்கிய நாளாகிறது. ஒரு ஆரோக்கியமான போராட்டத்திற்கு மக்களின் உள்ளார்ந்த ஆற்றல் அனைத்தும் உள்வாங்கப்பட வேண்டும். நண்பர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும்.

ஆனால் எமது தேசத்தில் உள்ளார்ந்த ஆற்றல் சிதைக்கப்பட்டதோடு, நண்பர்களை விரோதித்துக் கொண்ட துரதிர்ஷ்ட சம்பவங்களே அதிகமாகக் காணப்படுகிறது. உண்மைகள் துரோகம், வஞ்சகத்தினுள் மூழ்கடிக்கப்பட்டு விட்டன.

மனந்திறந்த பகிரங்கமான போக்கு என்பது அருகிவிட்டது. ஒருவரை ஒருவர் சந்தேகத்துடன் அணுகும் போக்கு என்பன அதிகரித்துள்ளன.

இத்தகைய போக்கு மிகப் பாரதூரமான பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. 1983 இன வன்முறையின் பின் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக அணிதிரண்ட சக்திகளை எண்ணிப் பாருங்கள்–தற்போதைய நிலைமையை சிந்தியுங்கள்.

இப்போராட்டத்தில் தம்முயிரை அர்ப்பணித்தவர்கள், என்றும் எம் நினைவுகளிலிருந்து நீங்கிவிடக்கூடாது. வரலாற்று நாயகர்களான இவர்கள் ஒரு சர்வாதிகார சூழ்நிலையின் காரணமாக இருட்டடிப்புச் செய்யப்படுவதற்கு யாரும் இடமளிப்பார்களானால் அதைவிடக் கொடுமையான செயல் வேறொன்றும் இருக்க முடியாது.

குறுகிய கண்ணோட்டங்கள், தற்காலிக ஆரவாரங்கள் சமுதாயத்தில் மிகச் சிறந்த மனிதர்களை காணாமல் போகச் செய்துள்ளன. மானிட நேயமும், பரந்த கண்ணோட்டம் உள்ளவர்களும் இத்தகைய போக்குகளுக்கு எதிராக செயற்படாவிட்டால் சமுதாயத்தின் நலன்களுக்காக செயற்படுவதற்கு யாரும் முன்வர மாட்டார்கள்.

பல்லுக்குப் பல், இரத்தத்திற்கு இரத்தம் பழிக்குப் பழி என்ற போக்கு, முழுச் சமுதாயத்தையும் பெரும் வியாதிக்குள் தள்ளிவிடும்; சமுதாயத்தின் நலன்களை முதன்மைப்படுத்தும் எந்த ஆக்கபூர்வமான முயற்சிகளையும் பின் தள்ளிக் காட்டுமிராண்டி நிலையை நோக்கி இட்டுச்செல்லும்.

மகாத்மா காந்தி, மார்ட்டின்லூதர் கிங், நெல்சன் மண்டேலா போன்ற மாபெரும் தலைவர்கள் பெரும்பான்மையான மனிதர்களை உள்வாங்கி மானிட நேசம், ஜனநாயகம் ஆகிய உள் உணர்வுடன் விடுதலை இயக்கங்களை நடாத்தினார்கள்.

ஆனால் எமது போராட்டத்தில் எந்த நல்ல விடயங்களையும் சகித்துக்கொள்ளாத போக்கு மேலோங்கிக் காணப்படுகிறதென்பதே துரதிருஷ்டமான உண்மையாகும்.

> “ இப்போராட்டத்தில் தம்முயிரை அர்ப்பணித்தவர்கள், என்றும் எம் நினைவுகளிலிருந்து நீங்கிவிடக்கூடாது. வரலாற்று நாயகர்களான இவர்கள் ஒரு சர்வாதிகார சூழ்நிலையின் காரணமாக இருட்டடிப்புச் செய்யப்படுவதற்கு யாரும் இடமளிப்பார்களானால் அதைவிடக் கொடுமையான செயல் வேறொன்றும் இருக்க முடியாது. ”

இயல்பாகவே மனிதர்கள் படும் துன்பங்களைக் கண்டு சகிக்கமுடியாமல் கொதித்தெழ விரும்பும் மானிடத்திற்கு இங்கு கடிவாளம் இடப்படுகிறது. சர்வாதிகார உணர்வு கொண்ட ஒரு குழுவின் சிந்தனைப் போக்கிற்கிணங்கச் செயற்பட வேண்டும் என அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இல்லையேல் அவர்கள் மரணத்தைத் தழுவ வேண்டும்.


இத்தகைய போக்கு மனிதர்களின் நலன் கருதி மேற்கொள்ளப்படும் அத்தனை முயற்சிகளையும் எதிர்நிலை நின்றே நோக்குகிறது.

தமிழர்களின் உரிமைகளை வென்று கொள்வதற்காகவும், உண்மையான சமாதானத்தை

> “ குறுகிய கண்ணோட்டங்கள், தற்காலிக ஆரவாரங்கள் சமுதாயத்தில் மிகச் சிறந்த மனிதர்களை காணாமல் போகச் செய்துள்ளன. மானிட நேயமும், பரந்த கண்ணோட்டம் உள்ளவர்களும் இத்தகைய போக்குகளுக்கு எதிராக செயற்படாவிட்டால் சமுதாயத்தின் நலன்களுக்காக செயற்படுவதற்கு யாரும் முன்வர மாட்டார்கள். ”

நிலைநாட்டுவதற்காகவும், இதுவரை எவ்வளவு பெரிய விலை செலுத்தப்பட்டுள்ளது..!. ஆனால் இன்னும் தமிழர்களின் உரிமைகளும், சமாதானமும் கானல் நீராகவே இருப்பதற்கு பிரதான காரணம் தமிழ் மக்களின் உள்ளார்ந்த சக்தி ஒன்றின் தவறான நிலைப்பாடே.

புதிய ஆரவாரங்களின் மத்தியில் இந்த நாட்டில் தமிழர்களின் சம உரிமைக்காகவும், ஜனநாயகத்திற்காகவும் சமாதானத்திற்காகவும் போராடியவர்களின் கல்லறைகள் மறக்கடிக்கப்பட்டு விடக்கூடாது. இவர்களை என்றென்றும் எமது இதயங்களில் ஏற்றி வைத்தலே இவர்களுக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்கும். ●



## மரணத்தின் மீதான வாழ்க்கை

உடல் கொடுத்தீர்
உயிர் கொடுத்தீர்
வேள்வித் தீயிற்கு விளைநிலமானீர்!

இறகுகள் உதிர்ந்தாற் போல்
சிரித்த முகத்துடனே
சிலையாகிப் போனீர்!

மண்ணுக்கும் மனிதனுக்கும்
மரணத்திற்கும் வாழ்க்கைக்கும்
இரத்த சாட்சியங்களாகினீர்!

கல்லறைகள் மீதான
காற்றோடு
சேதி சொல்வோம் தோழர்களே!

ஆழப்பதிந்த உங்கள் காற் சுவட்டில்
நிலமதிர
எழுந்து நிற்போம்; நினைவு கொள்வோம்.

உதிர்ந்து கிடக்கின்ற உடல்களுக்கும்
உயிருண்டு;
வாழ்க்கையுண்டு;

எங்கள் நினைவுகளில்
எங்கள் உணர்வுகளில்
வாழ்கிறீர்கள்!
என்றும் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்.

– சங்கர்
கல்முனை.



www.padippakam.com





# யுத்தத்தில் யாரும் வெல்லப் போவதில்லை மக்கள்தான் வாழ்க்கையை தோற்று விடுவார்கள்

சாணக்கியன்

சந்திரிகா அரசுடனான போர்த் தவிர்ப்பு ஒப்பந்தம் புலிகளினால் மீறப்பட்டதன் பின்பு, இரு பகுதியினருமே இராணுவ ரீதியாக வெற்றி கொள்வதிலே முனைப்பாக உள்ளார்கள்.

புலிகளைப் பொறுத்தவரை ஈழப்போராட்டம் இரண்டில் (பிரேமதாசா அரசுடனான யுத்தம்) இழந்துபோன கிழக்கு மாகாணத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதும், வடக்கு மாகாணத்தில் தற்போது நிலை கொண்டுள்ள இராணுவத்தை அங்கிருந்து வெளியேற்றுவதுமே அவர்களது நோக்கமாக இருக்க முடியும்.

சந்திரிகா அரசுடனான போர் தவிர்ப்பு ஒப்பந்தம் என்பது கிழக்கு மாகாணத்திற்குள் மீண்டும் தங்களை நிலை நிறுத்திக்கொள்ளக் கால அவகாசத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான தந்திரோபாயம் என்றே கருதமுடியும்.


## அரசின் பக்கம் சாய்ந்த நியாயத் தராசு

போர் தவிர்ப்பு ஒப்பந்தம் மீறப்பட்டு ஓரிரு மணித்தியாலங்களுள் புலிகள் திருமலை கடற்படைக் கப்பலைத் தாக்குவதற்கான தற்கொலைப் படையுடன் தயாராக இருந்துள்ளார்கள்.

அதுமாத்திரமல்லாமல், தொடர்ச்சியான இராணுவத் தாக்குதல்கள், விமானங்களை வீழ்த்துவதற்கான ஏவுகணைத் தாக்குதல்களும் தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளன. தமக்குள்ள பலத்தை வெளிக்காட்டுவதும், சிறீலங்கா இராணுவத்தை கதிகலங்கச் செய்து மனோவலிமை குன்றச் செய்வதும் இவர்களது நோக்கமாகும். இவ்வகையில் புலிகள் ஓரளவு வெற்றி பெற்றுள்ளார்கள் என்றே கூறலாம்.

கடற்படையின் யுத்தக்கப்பல்களை மூழ்கடித்தது, இரு விமானங்களை ஏவுகணைத் தாக்குதலால் சுட்டு வீழ்த்தியது, அம்பாறை மாவட்டத்தில் மிகவும் திறமையான கெரில்லா எதிர்ப்புப் படையான சிறப்பு அதிரடிப்படையைச் சார்ந்த 19 பேரை கொலை செய்தது போன்ற விடயங்கள் அரசாங்கத்தையும் கலங்க வைத்தது என்பதை மறுப்பதற்கில்லை.

> “பிரபாகரன் ஓர் ஹிட்லராக அழிந்து போகப் போகின்றாரா அல்லது ராஜதந்திர அரசியல் வழிமுறைகளுக்கூடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு தன்னையும் மக்களையும் காப்பாற்றப்போகின்றாரா என்பதை அவரது எதிர்கால முடிவுகளே தீர்மானிக்கும்.”



ஆனால் உடனடியாகவே இவற்றை ஈடு செய்யும் பணியில் அரசாங்கம் இறங்கியது. புதிய யுத்த விமானங்கள், இராணுவ போக்குவரத்து விமானங்கள், கடற்படைக் கப்பல்கள், ஏவுகணைகளை அழிக்கக்கூடிய மாற்று உபகரணங்கள்.... இன்னும் யுத்தத்தை நடாத்துவதற்கான பெருந்தொகையான ஆயுதங்களையும் அரசாங்கம் வாங்கிக் குவித்து வருகின்றது.

அதுமாத்திரமல்லாமல் முதல் முறையாக சிறீலங்கா அரசின் நடவடிக்கைகளுக்கு முழு உலகமுமே ஆதரவாக உள்ளது. இது சிறீலங்கா அரசாங்கத்துக்கு முன்னெப்போதையும் விட மிக அதிக உற்சாகத்தைக் கொடுத்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

## யாரும் வெல்வதில்லை மக்கள் பலியாகவே யுத்தம்

ஈழப்போராட்டம் மூன்றில் (சந்திரிகா அரசுடனான போராட்டம்) புலிகள் ஆரம்பத்தில் சில இராணுவ வெற்றிகளைப் பெற்றுள்ளார்களேயாயினும், ராஜதந்திர ரீதியில் இவர்களது அணுகுமுறை மிகப்பெரிய தோல்வியையே கண்டுள்ளது.

ஆனால், புலிகள் இாணுவ ரீதியான வெற்றிகளையும் தொடர்ந்து சம்பாதித்துக் கொள்வார்கள் என்பதற்கில்லை.

புலிகளுடனான போருக்கு அரசு வேண்டிக் குவித்துள்ள யுத்த தளபாடங்கள், புலிகளை மாத்திரம் பலிகொள்ளப் போவதில்லை. ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களையும் பலிகொள்ளப் போகின்றது. அதுமாத்திரமல்லாமல் தமிழ் மக்களில் மிகப்பெரும் பகுதியினர் மீண்டும் அகதி வாழ்க்கைக்கு தள்ளப்படுவது தவிர்க்க முடியாமல் போய்விடும்.

அரசாங்கம் முதலாவது கட்டமாக மீண்டும் கிழக்கு மாகாணத்தை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவே விரும்புகின்றது. என்ன விலை கொடுத்தும் இராணுவம் இதனைச் சாதித்தே ஆகவேண்டிய கட்டாய சூழ்நிலையில் உள்ளது

கிழக்கு மாகாணம் கட்டுப்பாட்டிற்குள் வந்தால் மாத்திரமே, சிங்கள, முஸ்லீம் மக்களைப் பாதுகாக்க முடியும் என்பதுடன், அதன் பின்னரே வடமாகாணம் மீதான முழுமையான தாக்குதலை இவர்களால் ஆரம்பிக்க முடியும்.

இவ்வகையில் கிழக்கு மாகாணத்தை விடுவிப்பதென்பதே அரசாங்கத்தின் முதலாவது உபாயமாக இருக்க முடியும்.

ஆனால் பகலில் சிதறிப்போய்விடும் புலிகள் இரவில் ஒன்று சேர்ந்து இராணுவ, பொலிஸ் முகாம்களைத் தாக்குவது படையினருக்கு அச்சுறுத்தலைக் கொடுத்து வருகின்றது. அதேசமயம் புலிகள் முழுமையாக சிங்கள, முஸ்லீம் மக்களை பகைத்துக் கொண்டுள்ளதானது, புலிகளின் நடமாட்டங்களுக்கு மிகவும் பெரிய நெருக்கடியைக் கொடுக்கும்.

> “அரச படைகளின் அத்துமீறல்கள், மனித உரிமை மீறல்கள், ஷெல்தாக்குதல்கள், விமானத்தாக்குதல்கள் யாவும் எதிர்காலத்தில் அரசின் மேல் சர்வதேச சமூகத்தின் கோப உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் என்பதை நாம் எதிர்பார்க்கலாம். எனவே யுத்தத்தை நீடிக்காமல் மிக விரைவில் தீர்வொன்றைக் காணவேண்டிய தேவையும் இலங்கை அரசுக்குள்ளது. இதற்கு அரசாங்கம் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வொன்றை முன்வைப்பதன் மூலம், தமிழ் மக்களே யுத்தத்தை நிறுத்தும்படி புலிகளை வற்புறுத்தும் ஓர் நிலையை தோற்றுவிக்க வேண்டும்.”

அத்துடன் புலிகளின் மக்களுடனான அணுகுமுறைகளும் - அதாவது கொலை செய்தல், குடிசனம் நெருக்கமான இடங்களில் இராணுவத்தினரை சீண்டிவிடுதல், கப்பம் பறித்தல் போன்ற விடயங்கள் யாவும் தமிழ் மக்கள் மத்தியில் நியாயமான விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. இவை யாவும் புலிகளை முறியடிப்பதற்கு இராணுவத்தினருக்கு பக்கபலமாக அமையும் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## ஏவுகணைகளும் இராணுவக் கணிப்பீடும்

500வரையிலான அனுபவம் பெற்ற புலிகளையும் ஏறத்தாழ 1500 புதிய புலிகளையும் உள்ளடக்கியதாக 2000 புலிகளே கிழக்கு மாகாணத்தில் இருப்பதாக அறியப்படுகின்றது. கெரில்லா யுத்தத்திற்கு இது ஓர் பெரிய தொகையாக இருந்தபொழுதும் கூட கிழக்கு மாகாணம் போன்ற பல இனங்கள் வாழும் பகுதியில் இவர்கள் மிக விரைவாக அழிக்கப்படுவார்கள் என்பதே வரலாறு.

இந்திய இராணுவம் வந்தபொழுதும், பின்னர் பிரேமதாசா அரசுடனான் யுத்தத்தின் போதும், கிழக்கு மாகாணம் மிக விரைவாகவே அரச படைகளின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.

இவை ஒருபுறமிருக்க அரசாங்கத்துக்கு மிகவும் பீதியை ஏற்படுத்திய புலிகளின் ஏவுகணைகள் முடிந்து விட்டனவா? அல்லது இன்னும் உள்ளதா? என்பதில் அரசாங்கம் தலையைப் பிசைவதாகத் தோன்றுகின்றது.

ஆனால் புலிகளின் வான், கடற் தாக்குதல்களை முறியடிக்க இந்தியாவும் இலங்கைக்கு உதவி செய்யும் நிலை உள்ளது. ஏற்கனவே பாக்குநீரிணையிலும், இலங்கை, இந்தியா இரண்டினதும் எல்லைக்குட்பட்ட இந்துசமுத்திரப் பிராந்தியத்திலும் இந்திய அரசு தனது கண்காணிப்புகளை வலுப்படுத்தியுள்ளது.

தமிழக மீனவர்களைக் கடத்துவது, தமிழகத்தில் இருந்து புலிகள் செய்யும் ஏனைய கடத்தல்கள் போன்றவற்றையும் தாம் பாரிய அளவில் குறைத்துவிட்டதாக இந்தியக் கடற்படை அறிவிக்கிறது.

அதேபோல் புலிகள் ஏவுகணைகளைக் கொண்டுள்ளதானது, தமது போக்குவரத்து விமானங்களுக்கே அச்சுறுத்தலானது என இந்திய அரசு கூறுகின்றது. எனவே இப்படியான விடயங்களில் இந்திய அரசு சிறீலங்காவிற்கு உதவிசெய்வதும் தவிர்க்க முடியாததாகும்.

எனவே,சுலபமாகசிறீலங்காராணுவத்தை வென்றுவிடலாம் என புலிகள் நினைத்தால், அவர்களுடைய கணிப்பீடு தவறானதாகும்.

## சிறுவர்களை அழிக்கும் மோசடித்தனக் கோஷம்

புலிகளின் கீழ்மட்ட உறுப்பினர்களுக்கு 3வது ஈழப்போராட்டமானது எமது இறுதிப் போராட்டம், இன்னும் 5வருடத்தில் நாம் தமிழீழத்தை ஸ்தாபித்து விடுவோம் என்றவகையில் மூளைச்சலவை செய்யப்பட்டே இவர்கள் யுத்தக்களத்துக்கு இழுத்து பலியாக்கப்படுகின்றார்கள்.

ஆனால் இன்றிருக்கக்கூடிய பூகோள, உள்நாட்டு அரசியலை உன்னிப்பாக கவனித்து வரும் எவரும் புலிகளின் தமிழீழம் அல்லது தனிநாடு என்ற கோஷம் அவர்களின் மிக மோசடித்தனமான கோஷம் என்பதைப் புரிந்துகொள்வார்கள்.

புலிகள் இராணுவ ரீதியில் தாக்குதிறன் உள்ளவர்கள், வல்லமையுள்ளவர்கள் என்பதன் பொருள், சிறீலங்கா இராணுவத்திலும் விட பலம்வாய்ந்தவர்கள் என்பதல்ல.

தனிநாட்டுக்கான போராட்டம்என்பது பல முனைகளில் நடத்தப்பட வேண்டியது. அதில் இராணுவ முனையும் ஒன்றாக இருக்கலாம்.

ஆனால் புலிகளின் இராஜதந்திர முனை என்பது முழுமையாக தோற்றுப் போனதால், இராணுவரீதியில் எதிரி வளரவும் காரணமாக உள்ளது. இந்த இராணுவ வளர்ச்சி புலிகளை பலவீனமாக்கும்என்பதும்தவிர்க்கமுடியாதது.

ஏறத்தாழ 10,000 போராளிகளுடன் இயங்கும் புலிப்படை முழுச் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் இயங்கும் அரசை வெற்றி கொண்டு விடுவது என்பது சுலபமல்ல.

www.padippakam.com



அதேபோல் 10,000 போராளிகளைக் காண்ட இராணுவ வலிமை பெற்ற கெரில் ா இயக்கத்தை அரசும் இலகுவில் வெற்றி காண்டு விட முடியாது.

எனவே நிலமை இப்படியே தொடருமா ால் போராட்டம் பல வருடங்களுக்கு நீடிப் துடன், கொலைகளும் அழிவுகளும்தான் குதியாக இருக்கும்.

எனவே அழிவுகளைத் தவிர்த்து, மக்க ந்க்கு கௌரவமான தீர்வொன்றைக் காண வண்டுமாயின், புலிகள் அரசுடனான பேச்சு ார்த்தைக்கு இணங்க வேண்டும்.

“
லிகளின் கீழ்மட்ட உறுப்பினர்களுக்கு மூன்றாவது ஈழப்போராட்டமானது மது இறுதிப் போராட்டம், இன்னும் ந்து வருடத்தில் நாம் தமிழீழத்தை ாபித்து விடுவோம் என்றவகையில் மூளைச்சலவை செய்யப்பட்டு வர்கள் யுத்தக்களத்துக்கு இழுத்து லியாக்கப்படுகின்றார்கள். ஆனால் இன்றிருக்கக்கூடிய பூகோள, உள்நாட்டு அரசியலை உன்னிப்பாக கவனித்துவரும் எவரும் புலிகளின் தமிழீழம் அல்லது தனிநாடு என்ற கோஷம் அவர்களின் மிக மோசடித்தனமான கோஷம் என்பதைப் புரிந்துகொள்வார்கள்.
”

இன்று தமிழ் மக்களுக்கு கௌரவமான ் தீர்வை உருவாக்கக்கூடிய இராணுவ மை புலிகளுக்குள்ளது. மிக அதிக அதிகா களுடன் கூடிய சமஷ்டி அரசொன்றை கிளால் பெறமுடியும். அந்த வலிமை அவர்க க்குள்ளது.

ஆனால் புலிகள் தமது இராணுவ வலிமை அதீதமாக மதிப்பிட்டு, இராணுவ ரீதியாக வற்று ிகாளளலாம என நினைததால முப்போராட்டத்தையுமே நாசமாக்கியதா த்தான் அர்த்தப்படும்.

**வெல்வதுதான் வீரம்**
**கொல்வது அல்ல**
**வாழத்தான் வாழ்க்கை**
**வீழ்வதற்கு அல்ல**

எனவே பிரபாகரன் ஓர் ஹிட்லராக அழி து போகப் போகின்றாரா அல்லது ராஜதந்திர ரசியல் வழிமுறைகளுக்கூடாக தமிழ் மக்க ன் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு தன் னயும் மக்களையும் காப்பாற்றப்போகின் ாரா என்பதை அவரது எதிர்கால முடிவுக ா தீர்மானிக்கும்.

மறுபக்கத்தில் அடுத்த ஐந்து பத்து வருடங் ளுக்கு புலிகளின் கெரில்லா யுத்தம் தொட வதற்கு வழிவிடப்படுமாயின், அவர்கள் இழந் போன சர்வதேச ஆதரவை மீளப் பெற்றுக் காள்ள அது வழிவகுக்கும் என்பதையும் ரசு புரிந்துகொள்ள வேண்டும்.

அரச படைகளின் அத்துமீறல்கள், மனித ரிமைமீறல்கள், ஷெல்தாக்குதல்கள், விமா த்தாக்குதல்கள் யாவும் எதிர்காலத்தில் ரசின் மேல் சர்வதேச சமூகத்தின் கோப ணர்ச்சிகளைத் தூண்டிவிடும் என்பதை ம் எதிர்பார்க்கலாம்.

எனவே யுத்தத்தை நீடிக்காமல் மிக விரை ல் தீர்வொன்றைக் காணவேண்டிய தேவை ் இலங்கை அரசுக்குள்ளது. இதற்கு அர ங்கம் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் டிய தீர்வொன்றை முன்வைப்பதன் மூலம், மிழ் மக்களே இவ் யுத்தத்தை நிறுத்தும்படி ிகளை வற்புறுத்தும் ஓர் நிலையை தோற்று க்க வேண்டும்.

சரியான தீர்வின் பின்னரும் புலிகள் யுத் ந்தை தொடர்ந்தால் அரசாங்கம் தனது தவிக்கு அயல்நாட்டு படைகளை அழைப்ப ம் தவிர்க்க முடியாததாகிவிடும். ●

த்தனை புயல்களை நீ சமாளித்துக் கடந்தாயென்பது முக்கியமல்ல; கப்பலை ஒழுங்காகக் கரை சேர்த் தாயா என்பதே! - வில்லியம் மீக்லி

## பதில்கள்... (....4ம் பக்கத் தொடர்ச்சி)

(....4ம் பக்கத் தொடர்ச்சி)

**கே. மாயவநாதன்**
**உடப்பு.**
**பிரபாகரனை பகத்சிங்கோடு ஒப்பிட்டுத் தொண்டமான் பேசியிருப்பதைப்பற்றி...?**

பதில்: அடுத்த கேள்வி.

**கா. தர்மலிங்கம்**
**தெகிவளை.**
**ராஜீவ் கொலை வழக்கு விசாரணைக்கு பிரபாகரனை அனுப்பிவைக்கும்படி இந்தியா கேட்டிருக்கிறதே. காஸ்ட்ரோவைப்போல், பகத்சிங்கைப்போல் பிரபாகரனும் தனது போராட்ட நியாயங்களைச் சொல்ல நீதிமன்றத்தைப் பயன்படுத்திக் கொள்வாரா?**

பதில்: "மதிப்பிற்குரிய நீதிபதிகளே என்னை மௌனமாக்குவதற்கு ஏன் இவ்வளவு அக்கறை? என்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு எதிரான எனது வாதங்களுக்கு இடமளிக்கத் தயங்குவது ஏன்?... இந்த ஆட்சியாளர்களின் பொய் களை முழுமையாக உடைத்தெறிவது, அடக்குமுறையால் துன்புற்றுவரும் கியூபா மக்களது முடிவற்ற துரதிர்ஷ்டத்தை நாட்டிற்கும் உலகத்திற்கும் தோலுரித்துக் காட்டுவது, இவையே எனது பணியாகும்... என்னைத் தண்டியுங்கள்! அது எனக்குப் பொருட்டல்ல! வரலாறு என்னை விடுதலை செய்யும்!" – அது பிடல் காஸ்ட்ரோ நீதிமன்றத்தைப் பயன்படுத்தி தங்கள் போராட்ட நியாயத்தை உலகுக்குப் பகிரங்கப்படுத்திய உரையில் வரும் பிரபல வாசகங்கள்.

"தனிநபர்களைப் பழிவாங்கும் நோக்கம் புரட்சி நடவடிக்கைகளின் அம்சமாகாது. ஏகாதிபத்திய இராணுவத்தின் சிப்பாய்களைப் போன்றவர்களல்ல நாங்கள்; அவர்கள் மனித இயந்திரங்கள். எவ்வித ஈவிரக்கமுமின்றி கட்டுப்பாடாகக் கொலை செய்வதற்கு மட்டுமே கற்பிக்கப் பட்டவர்கள் அவர்கள். நாங்கள் மனிதனை மதிக்கிறோம். மனித உயிர்களை வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவிற்கு நேசிக்கிறோம்" – இது பகத்சிங் நீதிமன்ற உரையில் சொன்னது.

புலிகளின் தலைவரும் தனது நியாயங்களைச் சொல்வாரென்றால் கேட்க ஆசைதான். தொண்டமான்தான் ஏற்பாடு செய்ய வேண்டும்.

**ரி. ரவிச்சந்திரன்**
**கொழும்பு-6.**
**தமிழ்க் கட்சிகள் இடைக்கால நிர்வாகத்தைக் கேட்கின்றனரா?**

பதில்: எல்லாக் கட்சிகளுமில்லை. உண்மையில் ஒரேஒரு குழுத்தான் ஓடித்திரிகிறது. அறிக்கைகளை விடுகிறது. விலைக்கு வாங்கிய பத்திரிகை ஆசிரியர்களை எழுதவைக்கிறது. மறைந்த அரசுத் தலைவர் கொடுத்த 'முறுக்கி'ல் (Windஇற்குத் தமிழ். நன்றி: யாழ்ப்பாணக் கடைப் பலகைகளுக்கான புலிப் பொறுப்பாளர்) இன்னும் சில சுத்துகள் மீதமிருக்கிறதாக்கும். எம்.பி பதவி போவதற்குள் புதுப்பதவியில் செட்டிலாகி விட வேண்டிய அவசரம் அவர்களுக்கு. ஆனால் உண்மையில் அரசாங்கம் தீர்வை வைக்காமல் எந்த இடைக்கால ஏற்பாடும் சாத்தியமில்லை.

**வி. இளையதம்பி**
**வவுனியா.**
**தொலைத் தொடர்புக் கோபுரம் தகர்ப்பின் பிறகு இங்கே ராணுவத்தினரின் தேடுதல் களோ, பரபரப்போ காணப்படவில்லை. அதனால் இது புலிகள் செய்யவில்லை என்று கதைக்கிறார்கள். அப்படியானால் அப்படித்தான் நடந்திருக்கிறதா?**

பதில்: நெருப்பிலிருந்து புகை.

**ஆர். அழகுராஜா**
**கொழும்பு-06.**
**கைக்குத்தல் அரிசி கையைக் குத்துவ தில்லை, பச்சைத் தண்ணி பச்சையாக இருப்பதில்லையே ஏன்?**

பதில்: உங்களுக்கு, உங்கள் பெயர் வாய்த்ததைப் போலத்தான்.

**சுரேன்**
**(முகவரி குறிப்பிடப்படவில்லை).**
**உங்களுடைய புதிய கண்ணோட்டம் பத்திரிகையை பார்த்தேன். அதில் புலிகளுக்கு விரோதமாகவே எழுதப்பட் டிருந்தன. உங்களை அவர்கள் கலைத்தது உண்மையாயிருக்கலாம். ஆனால் அவர்களால்தான் நாங்கள் இப்படியாவது உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இல்லாவிட்டால் எப்போதோ போய்ச் சேர்ந்திருப்போம். நாம் சந்திரிகா அம்மையாரை நம்பி "வாக்கு" போட்டோம். இப்போது என்ன நடந்தது. அவவினுடைய பிள்ளைகள் சுகத்தை அனுபவிக்கிறார்கள். நாங்கள் நரகத்தை அனுபவிக்கிறோம். எங்களிடமிருந்து "வாக்கு" பெறும்வரை சமாதானம் சமாதானம் என்று சொல்லுகிற வர்கள், அவர்கள் வென்றதும் எங்களை மறந்து விட்டார்கள். அவசரகால சட்டத் தைக் கொண்டுவந்து பொலிஸ், இராணுவ கெடுபிடிகளை அதிகரிக்கின்றனர். முதலாவது அவசரகாலச் சட்டத்தை தளர்த்த வேண்டும். இரண்டாவது அடாவடித்தனம் செய்யும் பொலிசாரையும் இராணுவத்தின ரையும் கட்டுப்படுத்த வேண்டும். இவைதொன்றும் செய்யத் தெரியாமல் ஜனாதிபதியாக இருப்பதில் பலன் இல்லை. மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு கிரனைட் அடித்து பொலிஸ் உத்தியோகத்தர் காயமடைந்ததால் புலிகளை பழிக்குப்பழி வேண்டுவதை விட்டுவிட்டு கோழைகள் போல் அப்பாவித் தமிழர்களின் வீட்டை அழிக் கிறார்கள். அடி உதை கொடுக்கிறார்கள். புல்டோசரால் வீடுகளை நாசமாக்குகிறார் கள். இதை ஒன்றும் நீங்கள் கவனத்தில் கொள்வதில்லை. நீங்கள் உண்மையாக தமிழ் மக்கள் பக்கம் இருப்பதாக இருந்தால் இனியாவது இப்படியொன்று ஏற்படாமல் தடுத்து நிறுத்துங்கள். அன்றைக்குதான் உங்களுடைய உண்மையான ஆதரவு எமக்குப் புரியும். காடுகளை அழிப்போருக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அதுவும் யாரைக் கொண்டு அழிக்கிறது? மக்களைக்கொண்டு (தமிழ்) அழிக்கிறது. ஆனால் யாழ்ப்பாணத்தில் புலிகள் வசமிருந்த இராணுவத்தினருக்கு புலிகள் நல்லமுறையில் மரியாதை கொடுத்தார்கள் என அவர்களே கூறினார்கள். அதை எல்லாம் உடனேயே மறந்துவிட்டனர். அன்றொருநாள் "சந்திரிகா" தொலைக் காட்சிப் பேட்டியில் புலிகள் சிங்கள மக்களை வெட்டிக் கொன்றதாக கூறினார். முதல் முதலில் யார் யாரை வெட்டிக் கொன்றது என்பது அவவுக்கு ஞாபகம் இல்லை போலும். மட்டக்களப்பு கடைகளில் புலிகளுக்கு பொருட்கள் கொடுத்ததற்காக இராணுவத்தினர் கடைகளுக்கு சென்று அடாவடித்தனம் செய்தனர். ஆனால் புலிகள் தங்களை அடையாளம் காட்டிக்கொண்டு இராணுவ காவலரண்களுக்கு பக்கத்தில் சென்று வந்தனர். ஒருத்தனுக்கு ஒரு நியாயம். இன்னொருவனுக்கு வேறு நியாயமா? மனித உரிமை மனித உரிமை என்று சந்திரிகா கூறுகிறார். ஆனால் மறுபுறத்தில் மனித உரிமைகள் மீறப்படு கின்றன. தயவுசெய்து இதற்கு தகுந்த பதில் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.**

பதில்: யுத்தம் புரியும் இரண்டு தரப்பினரா லும் மக்கள் கொல்லப்பட்டு வருகிறார்களே அல்லாமல், நல்ல விளைவுகள் எதையும் கொண்டுவர முடியவில்லை என்பதால் தான், இந்த அர்த்தமற்ற யுத்தத்தை நிறுத் தும்படி கண்டித்து புதியகண்ணோட்டம் எழுதிவருகிறது. சிங்கள இனவெறியர் களிடமுள்ள காட்டுமிராண்டித்தனத் திற்குக் கொஞ்சமும் குறைவில்லாத தமிழ் இனவெறியர்களும், பயமுறுத்துபவனைத் தட்டிக்கேட்கும் நேர்மைத் திராணியற்ற வர்களும்தான் அரசாங்கத்தின் கொலை களைக் கண்டித்துவிட்டு அமைதியாய் இருந்து விடுகிறார்கள்.

புதியகண்ணோட்டம் அரசாங்கத்தின் கொலைகளைக் கண்டிப்பதைப்போலவே புலிகளின் கொலைகளையும் கண்டித்து வருகிறது. தொடர்ந்து வாசித்துவாருங்கள் இதுபுரியும். எதைக் காரணம் காட்டியும் சிங்களப் பொதுமக்கள் கொல்லப்படுவதை நியாயப்படுத்தாதீர்கள். பிறகு எங்கள் தரப்புப் போராட்டத்திற்கு எந்த நியாயமும் இல்லாமல் போகும். சிங்களப் பொது மக்களையும் தமிழ்ச் சகோதரர்களையும் கூட கொலைப் பயமுறுத்தல்களினால் மிரட்டி வருகிற புலிகளின் பாசிசப் போக்கினைத்தான் நாம் கண்டிக்கிறோம். இது எங்கள் சமுதாயத்தையே அழிவுப் பாதையில் இறக்கிவிட்டிருக்கும் ஆபத்தான சக்தி என்றே எச்சரித்து வருகி றோம். புலிகளை விட்டுவிட்டுக் கடைக் காரர்களிடம் அடாவடித்தனம் செய்த ராணுவத்தினரின் செயல் கண்டிக்கப்பட வேண்டியதே.

புலிகள் விடுதலை செய்த பொலிசாரை நல்லமுறையில் நடத்தினார்கள் என்றும் எழுதியிருக்கிறீர்கள். புலிகளின் யாழ்ப்பாணச் சிறைகளில் வைக்கப்பட் டிருந்த ஐயாயிரத்திற்கு மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் என்னவானார்கள் என்றும் எமக்கு எழுதுங்கள் சுரேன்! ●

### மகாஜன மகளிர் அமைப்பு கண்டனம்

எல்பிட்டிய பிரதேசத்தில் அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராக அண்மையில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

புலிகளுக்கு எதிரான போராட்டம் என்பது தமிழர்களுக்கு எதிரான ஒன்றல்ல. புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளின் போது தெற்கில் வாழும் அப்பாவித் தமிழர்களை பாதுகாப்பது எமது பிரதான பொறுப்பாகும்.

இச் சந்தர்ப்பத்தில் தமிழருக்கு எதிராக இனவாதத்தை தூண்டி மீண்டும் ஒரு கறுப்பு ஜூலையை தெற்கில் ஏற்படுத்தினால், அதன்மூலம் புலிகள் மட்டுமே நன்மை அடைவர். எனவே இதுகுறித்து சிங்கள மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

தென்பகுதி வாழ் தமிழ் மக்களுக்கும் தேவையான பாதுகாப்பை வழங்குவது அரசாங்கத்தின் கடமையாகும்.

- மகாஜன மகளிர் அமைப்பு

**கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:**
**தோழரடிப்பொடி பதில்கள்**
**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

# நோய் நாடி நோய் முதல் நாடி...

**இன்றைய யுத்த நோயின் மூலத்தை மறைத்துக் கதையளந்து கொண்டிருப்பது மக்களுக்குச் செய்யும் துரோகமே!**

**விதுரன்**

தமிழ் மக்கள் மீண்டும் யுத்தச் சூழலுக்குள் சிக்க வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு சற்று நிம்மதியை தந்த மோதல் தவிர்ப்பு உடன்பாடு மீறப்பட்டதும் பழைய படி பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியுள்ளார்கள்.

தமிழ் மக்களின் இந்த நிலைக்கு காரணமானவர்கள் யார் என்பதையிட்டு வித்தியாசமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்ற போதிலும் சமாதான முயற்சிகள் தொடர வேண்டும் என்பதில் இருவேறுபட்ட கருத்தில்லை.

ஆனால், சமாதான முயற்சிகள் செவ்வனே தொடர வேண்டுமானால் இன்றைய அவல நிலைக்கு காரணம் என்ன என்பதை சரியாக இனங்கண்டு கொள்வது அவசியம். இதுகாலவரை நடந்த சமாதான முயற்சிகள் ஏன் தோல்வியில் முடிந்திருக்கிறது என்பது பற்றிய தெளிவில்லாமல் சமாதான முயற்சிகள் தொடர்வதற்கு ஆக்கபூர்வமான எதையும் செய்துவிட முடியாது.

## பைத்தியக்காரர்கள் பற்றி பயத்தில் வாந்தி எடுப்பவர்கள்

இந்நிலையில், இங்கு வெளிவரும் ஒருசில தமிழ் பத்திரிகைகளும் அப்பத்திரிகைகளின் நிரந்தர உரித்துடைய எழுத்தாளர்களும் எழுதிவரும் கருத்துக்கள் அத்தகைய தெளிவானதொரு நிலைப்பாட்டிற்கு வருவதற்கு துணை செய்வனவாய் இல்லை.

ஒன்று அவர்கள் எருதுக்கும் கோபம் வராமல் முடவனுக்கும் கோபம்வராமல் கருத்து தெரிவிக்க நினைக்கிறார்கள். அல்லது மொத்தப்பழியையும் அரசாங்கத்தின் மீது சுமத்தி அரசிற்கு மட்டுமே ஆணித்தரமாய் அழுத்தியுரைப்பதோடு நிறுத்திக் கொள்கிறார்கள்.

புலிகள் அல்லாதவர்களை பைத்தியக்காரர்கள் என வரைமுறைகளைக் கடந்து விமர்சனம் செய்யும் சிலருக்கு புலிகள் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் அத்தனை துணிச்சல் வருவதில்லை.

ஒருசிறு உதாரணம், "விடுதலைப் புலிகள் மோதல் தவிர்ப்பை மீறியமை தவறானது என்ற கருத்து பல மட்டங்களில் ஒலிக்கிறது. விடுதலைப்புலிகளின் போக்கு இன்று சர்வதேச கண்டனங்களுக்கு உள்ளாகியிருக்கிறது. விடுதலைப்புலிகள், இன்றைய அரசியல் யதார்த்தங்களுக்கு முகம்கொடுத்து மீண்டும் வருவது அணுகுமுறைகளில்தான் தங்கியுள்ளது..."

எங்கெங்கோ ஒளிந்து கொண்டு நின்று புலிகளை விமர்சனம் செய்யும் இந்த எழுத்தின் தன்மை எத்தகையது என்பதை நீங்களே முடிவுசெய்து கொள்ளலாம்.

பைத்தியக்காரர்களைவிடவும் சுயநினைவில் உள்ளவர்களுக்கே இவர்கள் அதிகம் பயப்படுகிறார்கள். இத்தகைய எழுத்தாளர்களின் உரிமைகளையும் பைத்தியக்காரர்கள் அங்கீகரிக்கும் அளவிற்கு சுயநினைவில் உள்ளவர்கள் அங்கீகரிப்பதில்லை என்பதைத்தான் இவர்களது எழுத்துக்களிலிருந்து விளங்கிக் கொள்ள முடிகிறது.

இத்தகைய எழுத்துக்களால் , சமாதான முயற்சிகள் மேம்பாடடையப் போவதில்லை. மாறாக, தவறுகளுக்கான மூலகாரணங்களைக் கண்டுகொள்ள, அவற்றை வெகுஜனங்களுக்கு இனங்காட்டத் தவறிவிடுவதால் முன்னேற்றத்திற்கு ஊறுசெய்பவையாகவே தொழிற்படும்.

## பிடரியில் துவக்கும் பிழையான கருத்தும்

இலங்கையில் தோன்றியுள்ள தற்போதைய நிலவரம் குறித்து உலகநாடுகள் தெரிவித்துள்ள அபிப்பிராயங்களுக்கும் நமது நாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தினை தமிழ்ப் பத்திரிகைகளை படிக்கும் எவரும் உணர்ந்திருக்கலாம். குறிப்பாக கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் தனித்தனியே வெளியிட்ட அறிக்கைகள், ஐரோப்பிய பாராளுமன்றத்தின் தீர்மானம் என்பவை கவனத்துக்குரியவை.

> ஒன்று அவர்கள் எருதுக்கும் கோபம் வராமல் முடவனுக்கும் கோபம் வராமல் கருத்து தெரிவிக்க நினைக்கிறார்கள். அல்லது மொத்தப் பழியையும் அரசாங்கத்தின் மீது சுமத்தி அரசிற்கு மட்டுமே ஆணித்தரமாய் அழுத்தியுரைப்பதோடு நிறுத்திக் கொள்கிறார்கள்.

"புலிகள் பின்நோக்கிச் சென்றுள்ளனர்", "புலிகள் தமது தீர்மானத்தினை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்",

"இலங்கை அரசாங்கம் புலிகளின் பல விவகாரங்கள் தொடர்பாக தகுந்த பதில் அளிப்பதற்கான தனது விருப்பத்தை நிரூபித்திருந்தது" என கனடா கருத்து தெரிவித்துள்ளது.

"சமாதான முயற்சிகள் தோல்வியுறும் பட்சத்தில் அதற்கான பாரிய பொறுப்பு விடுதலைப் புலிகளையே சாரும்" என்கிறது அவுஸ்திரேலியா.

"பேச்சுவார்த்தைகளை முறித்துக்கொள்வதற்கு விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட காரணங்களை நோக்கும் போது ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதில் புலிகளுக்கு இருக்கும் தயக்கம் தெளிவாகத் தெரிகிறது" இவ்வாறு ஐரோப்பிய பாராளுமன்றத்தின் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே தீர்மானத்தில், குடிமக்களுக்கு எதிராக கண்மூடித்தனமான தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும், இராணுவரீதியற்ற பொருட்கள் யாழ்குடாநாட்டுக்கு துரிதமாக விநியோகிக்கப்பட வேண்டும் என இலங்கை அரசுக்கும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன், மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து யுத்த நிறுத்தத்திற்கு வழிவகுக்க வேண்டும் எனவும் ஐரோப்பிய பாராளுமன்றம் இலங்கை அரசை கேட்டிருக்கிறது.

நமது நாட்டின் அரசியல் நகர்வுகள் தொடர்பாக உலகநாடுகள் தெளிவானதொரு பார்வையுடன் அழுத்தம் திருத்தமாக தமது விமர்சனங்களை வெளியிட்டிருப்பதோடு, அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆலோசனைகளை முன்வைத்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

இதேவேளை, தமிழ் மக்களின் வாழ்வோடும் தாழ்வோடும் ஒன்றியிருப்பதாய் பெருமைப்பட்டுக்கொள்ளும் நம்மூர் தமிழ் எழுத்தாளர்கள், விமர்சகர்களுக்கு இது புலனாகாமல் போனது எவ்வாறு? நோயை அறியாதவர்கள் மருந்தை அறிவார்களா?

## புலி அபிமானமும் மனிதாபிமானமும்

இத்தனைக்கும் மத்தியில் மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள் குழு தெரிவித்துள்ள கருத்துக்களை குறிப்பிடாமல் விட முடியாது.

"அரசுடனான பேச்சுக்களிலிருந்து தங்களை புலிகள் விலக்கிக் கொண்டமையும், போரை மீள ஆரம்பித்த விதமும் நாட்டு மக்களின் நலனுக்கு, குறிப்பாக தமிழ் மக்களின் நலனுக்கு உகந்த செயல் அல்ல. தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு தவறியதே தமது நடவடிக்கைகளுக்கான முக்கிய காரணமாக புலிகளால் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் அவர்களின் சில கோரிக்கைகள் இராணுவத் தன்மை கொண்டவையாக இருந்ததுடன் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் முற்றிலும் நியாயமற்றவையாகவும் இருந்தன..."

எனக் குறிப்பிட்டுள்ள பல்கலைக்கழக ஆசிரியர்கள் குழு, போர்ப்பிரதேசங்களில் வாழும் குடிமக்களின் நலன்கள் பேணப்பட வேண்டும்.... தமிழர்கள் அவமரியாதை செய்யப்படுவதையும் துன்புறுத்தப்படுவதையும் தவிர்க்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும்.... அரசியல் தீர்வுத்திட்டத்தை விரைவாக மக்கள் முன் சமர்ப்பிக்கும்படியும் அரசாங்கத்தினை கோரியுள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியபோதும் தக்க சமயத்தில் இதனை வெளியிட்டமைக்காக அவர்களை பாராட்டலாம்.

சிலர் என்னதான் மனிதாபிமானம் பற்றி பேசினாலும் அதில் புலி அபிமானம் கலந்திருப்பதை காண்கிறோம். சிலர் என்னதான் மனித உரிமைகள் பற்றிப் பேசினாலும் புலிகள் தவிர்ந்தவர்களை அவர்கள் மனிதர்களாய் கருதுவதில்லை என்றே எண்ணத்தோன்றும்.

அத்தகைய சூழலில் இந்த அறிக்கை ஆறுதல் தருகிறது. எழுந்துள்ள புதிய நிலைமைகள் தொடர்பாகவும், அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள் நம்பிக்கையையும் தெம்பையும் தருவதோடு அரசியல் விவேகத்திற்கும் அரசியல் நாகரீகத்திற்கும் எடுத்துக்காட்டாகவும் விளங்குகின்றன.

## பேச்சுரிமை மறுப்பும் விமர்சனக் கழுத்தறுப்பும்

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வை காண்பதற்கு சந்திரிகா அரசுக்கு ஆணை வழங்க யாழ் குடாநாட்டு மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

இப்போது மக்களின் ஆணையை சந்திரிகா அரசு நிறைவேற்றவில்லை என புலிகளும் விமர்சிப்பது வேறுவிடயம். ஆயினும், யாழ் குடாநாட்டிற்குள் வாழும் சாதாரண மக்கள் யுத்தமற்ற ஒரு சமாதானத் தீர்வை விரும்புகிறார்கள்.

பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததற்கு யார் காரணம் என்பதை வெளிப்படையாகப் பேசவோ, தமது கண்டனத்தை வெளி

☞

....அரசுடனான பேச்சுக்களிலிருந்து தங்களை புலிகள் விலக்கிக் கொண்டமையும், போரை மீள ஆரம்பித்த விதமும் நாட்டு மக்களின் நலனுக்கு குறிப்பாக தமிழ் மக்களின் நலனுக்கு உகந்த செயல் அல்ல. தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு தவறியதே தமது நடவடிக்கைக்கான முக்கிய காரணமாக புலிகளினால் சுட்டிக் காட்டப்பட்டது. ஆனால் இவர்களின் சில கோரிக்கைகள் இராணுவத் தன்மை கொண்டவையாக இருந்ததுடன், கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் முற்றிலும் நியாயமற்றவையாகவும் இருந்தன.

தமிழர்களின் பிரச்சினைகளுக்கும், புலிகளின் பிரச்சினைகளுக்கு மிடையேயுள்ள வேறுபாட்டை தெளிவாக வரையறை செய்வது அவசியமாகிறது. புலிகளின் உணர்வுபூர்வமான, புரிந்துகொள்ளச் சிரமமான தேவைகளை விளங்கிக்கொள்வது, அவர்களின் இயக்க ஆற்றலை அறிந்து கொள்ள அவசியமான ஒரு விடயம். அழிவுப்போக்கில் அமைந்ததும், கொலைகள், குரூர மனநிலையை சுட்டி நின்றதுமான இவர்களது இறந்தகாலம், இவர்களின் இன்றைய தனியான நடவடிக்கைகளை புரிந்துகொள்ள முடியாத ஒரு நிலைக்கு வழிவகுத்திருக்கிறது. இவர்களின் செயற்பாடுகள் தமிழ் சமூகத்தின் தற்கொலைக்கு, அழிவுக்கு ஒப்பான விடயங்களாகும்.

புலிகளின் நடவடிக்கைகள் நியாயமானவை, தமிழர்களின் ஒருமித்த ஆதரவைப் பெற்றவை என்ற மறைமுகமான தந்திரமிகு பிரசாரம் ஒன்று தற்போது மேற்கொள்ளப்படுகிறது. தங்கள் பிள்ளைகள் புலிகளில் சேர்க்கப்பட்டு விடுவார்களோ என்ற பயத்தில் பெற்றோர் வாழ்வது எல்லோருக்கும் தெரியும். தங்கள் பிள்ளைகளைத் தேட பெற்றோர் முயன்றால் துரோகிகள் என்று கருதப்பட்டு திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

ஒட்டுமொத்தமான எதிர்ப்புப் போராட்டங்கள் எதுவுமே சாத்தியமில்லை என்ற அளவிற்கு புலிகள் தமிழ் சமுதாயத்தை முடமாக்கியிருக்கிறார்கள். அதிகாரம் படைத்த தமிழ் கல்வியாளர், மற்றும் சில நிறுவனங்களின் உறுப்பினர்கள் புலிகளுக்கு துணைபோவது வெட்கக்கேடான ஒரு செயலாகும்....

– மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்க யாழ்.கிளையின் அறிக்கையிலிருந்து....



"எவன் வாழ விரும்புகிறானோ, அவனை அவன் மனதுக்குப் பிடிக்காத விஷயங்களைச் செய்யக் கட்டாயப்படுத்த முடியும். எவன் சாகத் தயாராக இருக்கிறானோ, அவன் மட்டும்தான் எல்லாவிதமான பிரச்சினைகளையும் தவிர்க்க முடியும். ஆனால் அவனால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. மரணம் மட்டும் தான் நமக்குச் சாதகமான சாட்சியம் என்ற கருத்தை ஏற்றுக் கொள்வதில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்." – லீக் ஃப்ரீட்லென்ஸ்

www.padippakam.com
படிப்பகம்

பிடவோ முடியாத இக்கட்டான ஒரு நிலை யில் அவர்கள் இருக்கிறார்கள்.

சமாதான முயற்சிகள் மீண்டும் தொடர வேண்டும். அமைதியும், சமாதானமும் உரு வாக வேண்டும் என்பதை வலியுறுத்திகூற முடியாதவர்களாய் இருந்தபோதும் அதற்காக ஏங்குபவர்களாகவே காணப்படுகிறார்கள்.

மென்றுவிழுங்கி அவஸ்தைப்பட்டு பி.பி.சி தமிழோசைக்கு கருத்துத் தெரிவித்திருக்கும் சாதாரண மக்கள்இதனையே தெரிவித்துள்ளார்கள். சுதந்திரமாக கருத்து தெரிவிக்க முடியாத இக்கட்டான நிலையிலும் குடாநாட்டு மக்கள் தெரிவித்துள்ள கருத்துக்களை அரசாங்கமும்வெகுஜன தொடர்புசாதன துறையைச் சேர்ந்தவர்களும் கவனத்தில் கொள்வது அவசியம்.

> இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்முயற்சி எடுக்க வேண்டிய பொறுப்பு மக்களுக்கு வாக்குறுதியளித்த ஜனாதிபதிக்கும் அதிகாரத்தில் உள்ள அரசுக்கும் உண்டு.

## அரசை வலியுறுத்துவது சரி புலிகளுக்கு சொல்வது யார்?

புலிகளை தவிர்த்து இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பது சுலபமில்லை. அவ்வாறே புலிகளின் கோரிக்கைகள் அத்தனையையும் நிறைவேற்றி இனப்பிரச்சினைக்கு சமாதானமாக அரசியல் தீர்வொன்றை காண்பதும் சுலபமானதில்லை. இதனை விளங்கிக் கொள்ளாத வரை நமக்கு விமோசனம் இல்லை.

புலிகள் தாக்குதல்களை நிறுத்தியபின்னர் மக்களின் ஆணை பெற்ற அரசாங்கம் சமாதான முயற்சிகளை தொடராமல் தாமதிக்க முடியாது. இதனை புலிகளிடம் வலியுறுத்த தயங்குபவர்கள் இரண்டு தரப்பும் மோதல்களை நிறுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறார்கள்.

இந்த யுத்தத்தில் பாரிய இழப்புக்களை சந்தித்திருப்பது அரசு. எனவே, ஒருநாளேனும் யுத்தம் நீடிப்பதை இன்றைய அரசு விரும்ப நியாயமில்லை. புலிகள் வலிந்து தாக்குவதை நிறுத்தினால் சமாதான முயற்சிகள் தொடர்வதற்கு சாதகமான நிலை தோன்றும்.

அதேவேளை அரசாங்கமும், 'யுத்தப்பிரகடனம் செய்யவில்லை தற்காப்பு தாக்குதல்களையே மேற்கொள்கிறோம், இன்னும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் உறுதியோடுள்ளோம், சமாதானக் கதவுகளைத் திறந்தே வைத்துள்ளோம்....' என்று சொல்லிக்கொண்டே சாதாரண தமிழ் மக்கள் கண்மூடித்தனமாக தாக்கப்படவும், பாதுகாப்பு நடவடிக்கைகளின்போது இனரீதியான காழ்ப்புணர்வுகள் வெளிப்படுத்தப்படுவதோடு சாதாரண மக்கள் அநியாயமாக தண்டிக்கப்படவும் அனுமதிக்குமானால், அது ஆயுதப்போராட்டம் தேவை என்ற எண்ணத்தை வலுப்படுத்துவதாகவேஆகும்.

> இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வை காண்பதற்கு சந்திரிகா அரசுக்கு ஆணை வழங்க, யாழ் குடாநாட்டு மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.... இப்போது மக்களின் ஆணையை சந்திரிகா அரசு நிறைவேற்றவில்லை என புலிகளும் விமர்சிப்பது வேறு விடயம்....

## தீர்வு வைக்கக் கேட்போம் வைத்தால் அதன்பிறகு...?

சமாதானப்பேச்சுவார்த்தை முறிவடைந்த பின் அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்து வருகிறது. சமாதானத் தீர்வொன்றுக்கு விடுதலைப் புலிகள் முன்வராவிட்டாலும் அரசாங்கம் அரசியல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் என்பது தமிழ் கட்சிகளின் கோரிக்கை.

புலிகள் இல்லாமல் சமாதான தீர்வொன்றைக் காணவே முடியாது என்பவர்களும், அரசியல் தீர்வை முன்வைக்குமாறு அரசாங்கத்தை வற்புறுத்தியுள்ளார்கள்.

இவர்கள் அரசாங்கம் முன்வைக்கும் அரசியல் தீர்வு நியாயமானதாயிருப்பின் அதனை ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்த புலிகளுக்கு அழுத்தம் கொடுப்பார்களா? அல்லது தீர்வுத் திட்டத்தில் குற்றம்குறைகளை கண்டு பிடித்துச் சொல்லிக் கழன்று விடுவார்களா என்பது தீர்வுத்திட்டம் முன்வைக்கப்பட்டால் தெரியும்.

அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என கூட்டணியும் வலியுறுத்தி வருகிறது. இருப்பினும் புலிகள் தலையசைக்காத எந்தத் தீர்வையும் அது தமிழ் மக்களுக்கு உகந்த தீர்வே ஆயினும் கூட்டணி உடன்படவோ, ஒத்துழைக்கவோ போவதில்லை.

இனப்பிரச்சினையை தீர்க்க அரசாங்கம் முதலில் அரசியல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் என்ற கோரிக்கை தவறானதில்லை.

ஆனால், முன்வைக்கப்படும்அரசியல் தீர்வினை நடைமுறைப்படுத்துவதற்கு அரசியல் தீர்வினை முன்வைக்ககோருபவர்களின்பங்களிப்பும் அவசியம்.

அரசியல் தீர்வு தமிழ் மக்களின் நியாயமானஉரிமைகளை உள்ளடக்கியதாகவும், தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய தீர்வாகவும் இருக்கும்பட்சத்தில் அந்தத் தீர்வுத் திட்டத்திற்கு தார்மீக ரீதியான ஆதரவை திரட்டுவதில் அரசியல் தீர்வை முன்வைக்க கோருபவர்களின் பணி பிரதானமானது.

அரசியல் தீர்வை முன்வைக்கக் கோருபவர்களுக்கு, அதற்குத் தெம்பும் திராணியும் இல்லாவிட்டால் அரசியல் தீர்வு முன்வைக்கப்பட்டாலும் தமிழ் மக்களின் அரசியலில் பெரிய மாறுதல் எதுவும் ஏற்படப்போவதில்லை.

## மக்கள் சமுதாயப் பொறுப்பு சமாதானத்திற்கு வழி

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்முயற்சி எடுக்க வேண்டிய பொறுப்பு மக்களுக்கு வாக்குறுதியளித்த ஜனாதிபதிக்கும் அதிகாரத்தில் உள்ள அரசுக்கும் உண்டு.

இனப்பிரச்சினையை தீர்க்க திட்டங்களைத் தயாரித்து, அதனை செயற்படுத்தும் பொறுப்பு அரசுக்கு உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் இத்திட்டங்கள், முயற்சிகளை வெற்றிக்கு இட்டுச்செல்வதில் வெகுஜனங்கள், ஜனநாயக சக்திகளின் ஆதரவும் அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பும் அவசியம். பத்திரிகைகளின் பங்கு அளப்பரியது.

ஒவ்வொரு தரப்பும் தத்தமது பங்கிற்கு பொறுப்புணர்வோடு சிந்தித்து செயற்படுவார்களாயின் இனப்பிரச்சினைக்குத் தீர்வினை எட்டுவது சுலபம்.

இதனை விடுத்து எல்லாமே மக்களின் ஆணையைப் பெற்ற ஜனா திபதியின் கடமை. என்று கருதி தத்தமது கடமைகளை புறக்கணித்தால் பிரச்சினை தீரவழிபிறக்காது.

சுவிஷ் நாட்டின் கூட்டாட்சி நடைமுறைகள் குறித்து எழுதப் பட்ட கட்டுரை ஒன்றில், அதனை எழுதியவர் தெரிவித்துள்ள கருத்துக்களை இங்கு நினைவு படுத்த விரும்புகிறேன். "பாதகமான பல கூறுகளும் சுவிஷ் ஆட்சி முறையில் இருந்தாலும் அந்நாட்டு மக்களின் நிதானம், பொறுமை, தன்னடக்கம் முதலானவையே சுவிஷ் நாட்டிலுள்ள கூட்டாட்சியின் வலிமைக்கு காரணம்" என பல ஆராச்சியாளர்கள் கூறுகின்றனர்.

**ஆகவே, எப்படியான தீர்வுத் திட்டமாயினும் மக்களின் சமுதாயப் பொறுப்பே எமது சமாதான வாழ்விற்கு எப்போதும் அடிகோலும்.**

●

> சிலசமயங்களில் ஒடுக்குமுறை என்பது அதைப்பற்றிப் பேசக்கூட முடியாத அளவுக்கு கடுமையான வன்முறையைக் கொண்டிருக்கிறது.
> - ஒகஸ்ட்டோ போவால்

### பிரபாகரனை.... (4ம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை சர்வதேச அரசியலில் தமக்கும் ஓர் தலைமைப் பாத்திரத்தைத் தேடும் கனடா, அவுஸ்திரேலியா போன்றவை இலங்கைப் பிரச்சினையில் மத்தியஸ்தம் வகிக்கத் தாம் தயாராய் இருப்பதாக பகிரங்கமாக அறிவித்ததென்பது இப்பிராந்தியத்தில் இந்தியாவுக்கு பிடித்தமான விடயமாக இராது.

அத்துடன் மீண்டும் ஓர் தடவை புலிகள் அரசுடன் பேச தயாராக இருந்தாலும் கூட, இந்தியாவுடன் அனுசரிக்க வேண்டிய தேவையோ, அல்லது கைது செய்யவேண்டிய குற்றவாளிகளுடன் ஓர் ஒப்பந்தத்திற்கு வருவதென்பதோ பல அரசியல் சங்கடங்களை தோற்றுவிக்கும். அத்துடன் பிரபாகரன் உடன்பாட்டுக்கு வந்து அமைதிவழிக்கு வந்தால் கூட தேடப்படுபவராகவே இருப்பார்.

ஆக, இந்தியா இக்கோரிக்கை மூலம் ஒரே கல்லில் பல மாங்காய்களை வீழ்த்தியுள்ளதாகவே தோன்றுகின்றது.


1. ராஜீவ் கொலை வழக்கு காலதாமதத்தின் பெயரால் அரசுக்கு நெருக்கடி ஏற்படுத்த முடியாமற் செய்யப்பட்டுள்ளது. அதாவது அரசிற்கெதிரான பிரச்சாரத்தில்-அர்ஜுன் சிங் போன்றவர்களின் குழுவாதத்திற்கான பிரச்சாரத்திலும் எதிர்க்கட்சியினரின் பிரச்சாரத்திலும்-இவ்விடயம் வலிமை இழக்கும்.

2. புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாயினும் சரி, புலிகள் தொடர்பான முடிவெடுப்பதில் இலங்கை அரசு இந்தியாவைப் புறக்கணித்துச் செயற்பட முடியாது. புலிகள் சம்பந்தப்பட்ட முக்கிய முடிவுகள் இந்தியாவின் கருத்தொற்றுமை இன்றி செயற்படுத்துவதற்கு ஆப்பு வைக்கப்பட்டுள்ளது.

3. இந்தியாவின் கருத்தொற்றுமை அல்லது உடன்பாடின்றி வேறெந்த நாடும் இலங்கை இனப்பிரச்சினை விடயத்திற் குறிப்பாக புலிக்கும் அரசுக்கும் மத்தியஸ்தம் வகிக்க முடியாது ஆப்பு வைக்கப்பட்டதாகவே தோன்றுகிறது.

4. பிரபாகரனும் அவரது சகாக்களும் இந்தியாவால் தேடப்படும் அல்லது கைதுசெய்யப்பட வேண்டிய குற்றவாளிகள் என உலகுக்கு அறிவிக்கப்பட்டதனால் பிரபாகரன் கழுத்தின் மேல் நிரந்தரமாக தூக்குக்கயிறு தொங்க விடப்பட்டுள்ளது.

எனவே இந்தியா பிரபாகரனை நாடுகடத்தக் கோரியதென்பது வெறுமனே ராஜீவ் கொலை வழக்குடன் சம்பந்தப்பட்ட சட்ட நடவடிக்கையின் ஓர் அம்சம் மட்டுமல்ல; இது தாக்கமான அரசியல் விளைவுகளையும் கொண்டுள்ளது. இன்றைய நிலையில் இக்கோரிக்கையானது இந்தியாவின் அரசியல் ராஜதந்திரம் என்றே கருதமுடியும்.




இன்ஸ்பெக்டர்ஏற்றம் கிராம சம்பவம்

ஆணைக்குழு நியமித்து விசாரிக்க வேண்டும்

ஈ.பி.ஆர்.எல்.எப். வலியுறுத்தல்

மட்டக்களப்பு.

கடந்த 12ஆம் திகதி பொத்துவில் இன்ஸ்பெக்டர் ஏற்றத்தில் பொலீஸ் மீது புலிகள் தாக்குதலை மேற் கொண்டார்கள் என்ற தவறான கருத்தின் காரணமாக 60க்கு மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் அரசின் மீது பொதுமக்களுக்கிருந்த அபரிமிதமான நம்பிக்கையை குறைத்திருப்பதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கல்... அலுவலகம் விடுத்துள்ள ... துள்ளது.

இன்ஸ்பெக்டர் ஏற்ற சம்பவம்

நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை

(அக்கரைப்பற்று குறூப் நிருபர்)

பொத்துவில் பிரதேசத்தில் இன்ஸ்பெக்டர் ஏற்றம் என்னும் இடத்தில் மீளக் குடியேறியுள்ள குடும்பங்கள் மீண்டும் அகதிகளாக பொத்துவில் ஆலயத்தில் தஞ்சமடைந்துள்ளார்கள். இந்தச் சம்பவம் பற்றிப் பொலிஸ் உயர் மட்ட விசா...

**Police burn homes in Pottuvil** - *EPRLF*

A police unit in the East went berserk and attacked a village near Pottuvil burning 103 homes, assaulting civilians and injuring some persons with gunfire in an incident which occurred on May 12, the Eelam People's Revolutionary Liberation Front (EPRLF) has complained to President the President to investigate the incident, which they say was sparked off after a police constable on duty at Kundumadu Inspectorettrum, near Pottuvil, injured his foot when his rifle accidentally went off.

The EPRLF's letter to the President, which was released to the ...

பொத்துவில் இன்ஸ்பெக்டர் ஏற்றத்தில்உள்ள பொலிஸ்சோதனைச் சாவடியில் 12.05.95 பிற்பகல் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் பொலிசார் ஒருவர் காயமடைந்தார். அதனைத் தொடர்ந்து இன்ஸ்பெக்டர் ஏற்றம் கிராமத்தில் மீளக்குடியமர்ந்த தமிழ் மக்களின் குடிசைகள் பொலிசாரினால் தீக்கிரையாக்கப்பட்டது. பொதுமக்கள் கண்மூடித்தனமாக தாக்கப்பட்டார்கள். இதனால் அம்மக்கள் மீண்டும் அகதிகளாக கோவில்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சமடைந்தார்கள்.

தமிழ்க் கட்சிகள் ஏகோபித்த குரலில் இதற்கு கண்டனம் தெரிவித்திருந்தன. இந்த அசம்பாவிதங்கள் தொடர்பாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கிழக்கு பிராந்திய அலுவலகமும் உடனடி நடவடிக்கை எடுக்க கோரி ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரிக்க குழு ஒன்று நியமிப்பதோடு, சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இதுபோன்ற சம்பவங்கள் தொடராமல் உரிய நடவடிக்கை எடுப்பதோடு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு மற்றும் நிவாரண உதவிகளும் வழங்கப்பட வேண்டும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அக்கடிதம் மூலம் ஜனாதிபதியை கேட்டிருந்தது.

தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைகளை செவிமடுத்த அரசு இன்ஸ்பெக்டர் ஏற்றம் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சகல ஏற்பாடுகளையும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் மேற்கொண்டு வருகிறார்.

இன்ஸ்பெக்டர் ஏற்றம் கிராமத்திற்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் எம்.எச். எம். அஷ்ரப் அவர்கள் அமைச்சு நிதியில் நான்கு கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

அநியாயம் அட்டூழியங்களுக்கு பலியான அப்பாவி தமிழ் மக்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்க வகை செய்திருப்பதோடு, அரசு தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிய அவநம்பிக்கைகளை போக்கியிருப்பது வரவேற்கத் தக்கது.

●

www.padippakam.com



# இருள் சூழ்ந்த இன்றைய சூழ்நிலை

- எஸ். திருநாவுக்கரசு

புலிகளியக்கம் பாரிய இனவன்முறை ஒன்றை ஏற்படுத்துவதற்கு மிகப் பெரும் பிரயத்தனத்தை மேற்கொண்டிருக்கும் இவ் வேளையில் நாட்டில் மனித உரிமைகள் பாதுகாப்பென்பது பெருங் கேள்விக்குரியதாக மாறியுள்ளன.

நாட்டின் வடபகுதிக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் செல்வது அறவே நின்றுவிடுமோ என அஞ்சுமளவிற்கு நிகழ்ச்சிகள் நடந்தேறுகின்றன.

அரச அதிபரின் பெயரில் செல்லும் வாகனத் தொடர்களைத் தவிர வேறெந்த தனியார் வாகனங்களும் வடபகுதிக்கு அனுமதிக்கப்படுவதில்லை. தெய்வம் வழி விட்டாலும் பூசாரி வழிவிடார் என்பதுபோல் தான் தாண்டிக்குளம் பகுதியில் நிகழ்ச்சிகள் நடந்தேறுகின்றன.

புதிய அரசு பதவிக்கு வந்த பின் ஏற்பட்ட சமாதானச் சூழ்நிலை பொருளாதாரத்தடை, கடல்வலயத்தடை போன்றவற்றிலிருந்து ஒரு விடுதலையைத் தரும் என்ற வடகிழக்கு மக்களின் நியாயமான எதிர்பார்ப்பு சிதைக்கப்பட்டு விட்டது. மக்களின் நம்பிக்கை மீது மண்ணள்ளிப் போடுவதில் புலிகள் பெரும் பங்கு வகித்தது வெளிப்படையான உண்மையேயாயினும், அரசு என்ற வகையில் தனக்குள்ள பொறுப்புக்களை அது தட்டிக்கழித்து விட முடியாது.

மக்கள் தமது அன்றாட வாழ்க்கையின் போது சந்திக்கும் கசப்பான அனுபவங்கள் அவர்களை வெகுதூரம் அன்னியமாக்கி விடுகிறது.

கொழும்புக்கு வரும் தமிழர்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள், அவர்களை வரவேண்டாமென்றால் சொல்லி விடுங்களேன் என்ற நிலைக்குத் தள்ளியுள்ளது.

நிதானமற்ற கண்மூடித்தனமான கைதுகள், தமிழர்கள் எல்லோரும் புலிகள் என்ற பார்வையை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்திவிடக் கூடிய அபாயம் நிலவுகிறது. இன்று ஒவ்வொரு தமிழரும் தன்னை பயங்கரவாதி அல்ல என்று நிரூபிக்க வேண்டிய கட்டாயத்திலிருக்கிறார்கள். இதில் வயது, பால் என்ற வேறுபாடுகள் கிடையாது.

> “தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்களின் நலன்கள் இராணுவ நலன்களை விட மேலானவை என்பது உணரப்படாவிட்டால், இந்த நாடு தொடர்ந்து இரத்தம் சிந்துவது தவிர்க்க முடியாதது.”

இத்தகைய நடவடிக்கைகள் சமூக விரோதிகளையும் தமிழர்களுக்கெதிராகச் செயற்பட ஊக்கப்படுத்தி விடுகிறது. புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளின் பாரதூரத்தன்மை புரியாமல் இதை இங்கு எழுதவில்லை.

ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டம் என்ற பாணியிலான செயற்பாடுகள் மக்கள் எல்லோரையும் ஒரு பக்கமாகத் தள்ளிவிடும் என்பதை அரசு உணரவேண்டும்.

'நாடு ஜனநாயக சூழலினுள் பிரவேசித்துள்ளது, மனித உரிமைகள் உத்தரவாதப் படுத்தப்பட்டுள்ளன' என எவ்வளவுதான் பிரச்சாரம் செய்தாலும் வடகிழக்கில் இவை அர்த்தமில்லாத சொற்பிரயோகங்களாகத் தான் மாறி விட்டன. அரசினால் அனுமதிக்கப் பட்ட பொருட்கள் கூட வடக்கிற்குச் செல்வ

> “இன்று ஒவ்வொரு தமிழரும் தன்னை பயங்கரவாதி அல்ல என்று நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள்.”

தில்லை என்பது யாரும் மூடிமறைத்துவிட முடியாத உண்மை.

கிழக்கில் புலிகளின் நடவடிக்கைகளுக்காக சாதாரண மக்கள் பழிவாங்கப்படுவது அன்றாட நிகழ்ச்சி. இதயசுத்தியுடன் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசு தீர்வு காண விரும்பினால் மக்களின் மனங்களை வென்று கொள்ள முனைய வேண்டும்.

தமிழ் மக்கள் தாம் அன்னியர்கள் என்ற உணர்வு அவர்களிடம் ஆழமாகப் பதிந்து விட்டால் மனதில் ஏற்படும் இந்த மாற்றத்திற்கு வேறெந்த வழியிலும் ஒட்டுப் போட முடியாது.

சில நம்பிக்கை தரும் செயற்பாடுகள் அரசு தரப்பில் இல்லாமலில்லை. மீண்டும் ஒரு இன வன்முறையை உருவாக்க விசமிகள் திட்டமிட்டபோது அதனை பகிரங்கமாக கண்டித்ததோடு அத்தகைய சக்திகளை அம்பலப் படுத்தி உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்ட ஜனாதிபதியை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஆனால் தமிழ் மக்களின் துன்ப துயரங்களைத் துல்லியமாக அறியவும், அவற்றை நிவர்த்திக்க உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமுமே இந்நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.


பேரினவாத சக்திகளோ, குறுந் தேசியவாத சக்திகளோ இந்தநாட்டு தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்களின் உயர்வான நோக்கத்தைச் சிதறடித்துவிட முடியாது. எனவே துணிந்து செயற்படுவது இன்றைய ஆட்சியாளர்களின் கடமை.

தமிழ் மக்களின் எரியும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நடைமுறை ரீதியான பிரயத்தனங்களை அரசு மேற்கொள்கிறது என்ற செய்தி மக்களைச் சென்றடைய வேண்டும்.

தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்களின் நலன்கள் இராணுவ நலன்களைவிட மேலானவை என்பது உணரப்படாவிட்டால், இந்த நாடு தொடர்ந்து இரத்தம் சிந்துவது தவிர்க்க முடியாதது.

மிக அபாயகரமான பயங்கரவாதத்தை கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென இங்கு கூறவரவில்லை. ஆனால் அதற்கெதிரான நடவடிக்கை மக்கள் மீதான பயங்கர வாதமாக இருக்கக்கூடாது. அவர்களை சேர்ந்து வாழ முடியாது என்ற நிலைக்குத் தள்ளி விடக்கூடாது என்பதே எமது பேரவா ஆகும். ●

## குறுக்கெழுத்துப் போட்டி-13



### இடமிருந்து வலம்

1. பேரரசன்.
8. ராஜீவ் கொலை வழக்கை கையாளும் இந்திய அமைச்சர்.
9. திருகோணமலையில் ராணுவத்தினரின் 'ராம் சக்தி' நடவடிக்கை நடந்த இடம்.
10. கோமாதா.
12. எழுத, படிக்க தெரியாத நபர்.
14. ஒற்றுமைக்கு உதாரணம் காட்டும் பறவை.
16. மூதாதைக்குள்ளது; நமக்கில்லாதது. (தலைகீழ்)
18. தானியம் நிரப்பிய சாக்குப் பை. (தலைகீழ்)
19. பாண்டவரில் கடைக்குட்டி.
22. முறையற்றது.
24. பாரி மன்னனின் நட்புப் புலவர். (குழம்பி)
26. தோன்றுமிடம்.
27. 'முறை' சேர்ந்தால் உயிர் உடமைக்கு ஆபத்தை விளைவிப்போர் செயல்.
28. இசை.
29. பொங்கல்.
30. 'பி' சேர்த்தால் பறக்கும் பூச்சி ஒன்று.
31. யானை முதுகில் உள்ள இருக்கை.
32. நெருப்பில்லாத புகை.

### மேலிருந்து கீழ்

1. ஜனாதிபதி.
2. காதலின் சோகமான முடிவு.
3. குடியரு.
4. உள்ளீடற்ற நெல். (தலைகீழ்)
5. ----சுகம் தரும். (குழம்பி)
6. கணவன். (தலைகீழ்)
7. பெரும்பாலும் மரத்தில் இருக்கும் ஒருவகைப் பாம்பு.
11. பழைய தமிழ் இலக்கண நூல்.
13. மழைக்கும் காவலன். வெயிலுக்கும் காவலன்.
15. ஓர் இனத்தின் இரு வகைகளை ஒன்றுசேர்த்து உருவாக்கும் வீரிய வகை.
17. தென்னிந்திய திரைப்பட இசையமைப்பாளர். (தலைகீழ்)
20. அரிய வகைச் சங்கு.
21. முன் அல்ல. (தலைகீழ்)
23. அகம் எதிர்.
25. விரோதிகள். (தலைகீழ்)
28. ஊசிக்குமுண்டு நமக்குமுண்டு. சிலருக்குக் கேட்காது.

### கு.எ.போட்டி-12 விடைகள்:

| இடமிருந்து வலம்: | மேலிருந்து கீழ்: |
|---|---|
| 1. பேச்சுவார்த்தை | 1. பேரிகை |
| 5. காவி | 2. சுப்பிரமணியசுவாமி |
| 7. தன்னம்பிக்கை | 3. வானவர் |
| 10. அம்(மா) | 4. தந்தை |
| 11. வானரம் | 6. விரும்பு |
| 12. பின்பு | 8. நீக்கம் |
| 13. சமநீதி | 9. வசனம் |
| 14. துரும்பு | 10. அன்புக்கு |
| 15. வணிகன் | 12. கும்பி |
| 16. கொக்கு | 13. சிறுதீனி |
| 18. மப்பு | 14. துடைப்பம் |
| 20. குடு | 17. கொடும்பாவி |
| 21. சுகானுபவம் | 18. மனு |
| 24. வாலி | 19. புவனம் |
| 25. பாலைவனம் | 22. காலிதா |
| 27. தாமிரம் | 23. சவம் |
| 28. விலாசம் | 26. லைலா |

சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:

**இராஜேஸ்வரி சிவசுந்தரம்**
**198, கோவிலடி,**
**மஸ்கெலியா.**

பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப் பட்ட ஐந்து பேர்கள் வருமாறு:

1. பி. நளாயினி,
   9, வண்டிங்ஸ் லேன், மட்டக்களப்பு.
2. அ. பெற்றிக்,
   105, சேர்ச் வீதி, கொழும்பு-02.
3. க. அழகையா,
   231, பிரதான வீதி, திருகோணமலை.
4. க. தர்மராஜா,
   2ம் குறிச்சி, காரைதீவு.
5. என். வினோதினி,
   104-5/2, மனிங் பிளேஸ், கொழும்பு-06.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 30ந் திகதிக்கு முன் அனுப்பிவையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்,**
**த.பெ.இல: 442,**
**கொழும்பு.**

"தோழர்களே! ஒன்றை உறுதியாகக் கூறிக் கொள்வேன். ஓரிரு எதிர்களை நாம் அழித்து விட்டதாலேயே நாம் வீரர்களாகிவிட மாட்டோம்! சித்திரவதைகளையும் சிறைக் கூடங்களையும் கண்டுவிட்டதாலேயே நாம் சிறந்த கம்யூனிஸ்டுகளாகிவிட மாட்டோம். நீதிமன்றங்களை அவமதித்ததாலேயே நாம் நீதிமான்களாகிவிட மாட்டோம். பொழுது விடியப்போகும் நேரத்தில் கதவைத் திறப்பார்கள். போர்க்களத்துக்குப் போகிற வீரர்களைப் போல் பொங்கும் உணர்வுடன், புரட்சி உணர்வைப் புன்னகையில் ஏற்றிக்கொண்டு மரணக் கயிற்றை மாட்டிக் கொள்ளப் போய் விடுவதனாலேயே புரட்சியாளர்களாகிவிட மாட்டோம். ஆம்! தோழர்களே! புரட்சிக்காக உயிரை இழப்பதனாலேயே தியாகிகளாகிவிட மாட்டோம்! நாம் இறப்பதற்கு முன்னால், நாம் கற்ற பாடமும் பெற்ற அனுபவமும் எதிர்காலப் புரட்சிக்கு என்ன வழியைத் தரப்போகிறது என்பதைக் கூறாமல் இருந்து விடுவோமானால், நம்மையும் வரலாறு மன்னிக்காது. 'பெரிய நெருக்கடியின்போது, நடுநிலைமையில் இருப்பவர்களுக்காகத்தான் நரகத்தின் மிக வெப்பமான பகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன' என்றான் தாந்தே எனும் கவிஞன். ஆம், தோழர்களே புரட்சிகரப் போராட்டத்தில் முன்கை எடுத்த நாம் மௌனிகளாக மாண்டுபோனால், நம்மைவிடப் பெரும் துரோகிகளை வரலாற்றில் தேடித்தான் பிடிக்க வேண்டும்."

- நன்றி: சுவருக்குள் சித்திரங்கள்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF
22, வெள்ளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்